


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜூலை-2018

We Are Here..!! To Guide You..!!

**8939 144 344, 8939 244 344**



# We Shine Study Circle

**விழுந்தால் அழாதே,**

**எழுந்திரு,**

**இது வெற்றியின் முதல் படி.**

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone : 8939144344,8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 3 - 7 | தமிழக நிகழ்வுகள் |
| 8 - 40 | தேசிய நிகழ்வுகள் |
| 40 - 53 | உலக நிகழ்வுகள் |
| 53 - 55 | முக்கிய தினங்கள் |
| 55 - 59 | விருதுகள் |
| 59 - 67 | நியமனங்கள் |
| 67 - 69 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் |
| 69 - 79 | விளையாட்டு நிகழ்வுகள் |
| 79 - 81 | வர்த்தக நிகழ்வுகள் |
| 81 - 82 | நூல்கள் |













# தமிழக நிகழ்வுகள்

1. தேசிய அளவிலான தூய்மை நகரங்கள் பட்டியலில் 13-வது இடமும், தமிழக அளவில் முதலிடமும் பிடித்துள்ள நகரம் எது?

**விடை: திருச்சி**

**விளக்கம்**

1. மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள இப்பட்டியலில் தேசிய அளவில் கோயம்புத்தூர் 11-வது இடமும், ஈரோடு 51 மற்றும் சென்னை மாநகராட்சி 100-வது இடத்தையும் பிடித்துள்ளன.

2. எந்த நாட்டுடன் கோவை மாநகராட்சி 24 மணி நேர குடிநீர் திட்டத்துக்கு ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை : பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. பிரான்ஸ் நாட்டின் சூயஸ் நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது தலைநகரம் : பாரிஸ்
   நாணயம் : யூரோ
   பிரதமர் : எட்வர்டு பிலிப்
   அதிபர் : இம்மானுவேல் மேக்ரான்

3. ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டிற்கு, கர்நாடகம் தர வேண்டிய காவிரி நீரின் அளவு என்ன?

**விடை : 31 டி.எம்.சி**

**விளக்கம்:**

1. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.மசூத் ஹீசைன்
2. தில்லியில் ஜூலை 2 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

4. 17-வது உலகத் தமிழ் இணைய மாநாடு எங்கு நடைபெற உள்ளது?

**விடை : கோவை**

**விளக்கம்:**

1. ‘‘அறிவுசார் தமிழ்த் தேடுபொறிகள்’’ என்ற தலைப்பில் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வரும் ஜூலை 6 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
2. இதனை, உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்த உள்ளன.

5. கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோயை கண்டறிவதற்காக, ‘நீர்ம அடிப்படையிலான உயிரணுவியல்’ (Liquid Based Cytology (LBC)) என்ற தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?

**விடை : தமிழ்நாடு**

**விளக்கம்:**

1. LBC தொழில்நுட்பத்தில் ஒரு மென்மையான தூரிகையை பயன்படுத்தி கர்ப்பபையின் கழுத்துப்பகுதிகளிலிருந்து செல்கள் எடுக்கப்படும். இது காப்பு வேதிப்பொருள் நிறைந்த ஒரு குடுவைக்கு மாற்றப்பட்டு ஆய்வக பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்படும்.

6. லோக் ஆயுக்தா சட்டத்தை அண்மையில் நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?

**விடை : தமிழ்நாடு**

**விளக்கம்:**

1. ஜூலை 9-ல் தாக்கல் செய்யப்பட்ட இச்சட்டத்தின் படி லோக் ஆயுக்தா என்ற ஊழல் வழக்குகளை விசாரிக்கும் அமைப்பு அமைக்கப்பட உள்ளது.
2. இதன் மூலம் முதல்வர், அமைச்சர்கள், சட்டப்பேரவை, உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏக்கள், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இந்த லோக் ஆயுக்தா அமைப்பின் அதிகார வரம்புக்குள் வருவர்.

3. பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மத்திய அரசை சேர்ந்தவர்களாக இருந்தால் அதனுடைய ஒப்புதலை பெற்ற பிறகே விசாரணை மேற்கொள்ளப்படும்.

4. 1988-ம் ஆண்டு ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக லோக் ஆயுக்தா விசாரிக்கும். ஊழலுக்கு துண்டிவிடுதல், லஞ்சம் அளித்தல் அல்லது லஞ்சம் பெறுதல் அல்லது ஊழல் சதிசெயலில் ஒருநபருக்கு எதிராக ஈடுபடும் மற்றொருவரின் செயல் அல்லது நடத்தைகளையும் விசாரிக்கலாம்.

7. லோக் ஆயுக்தா அமைப்பிற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வுசெய்யும் தேர்வு குழுவின் தலைவர் யார்?

**விடை : மாநில முதல்வர்**

**விளக்கம்**

1. ஜூலை 9-ல் தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட லோக் ஆயுக்தா அமைப்பின் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களாக எதிர்கட்சி தலைவர் மற்றும் சட்டப்பேரவைத் தலைவர் ஆகியோர் இருப்பார்கள் என கூறப்பட்டுள்ளது.
2. இதன் தலைவர் உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது முன்னாள் நீதிபதி அல்லது ஊழல் தடுப்புக்கொள்கை, பொதுநிர்வாகம், நிதி மற்றும் சட்டத்தில் 25 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றுள்ள நபர் இருப்பார்.

3. உறுப்பினர்களாக 4 பேர் நியமிக்கப்படுவர். இதில் 2 பேர் நீதித்துறையை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

4. லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் குறைந்தபட்ச வயது 45. பதவிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது 70 வயது ஆகும்.
5. புகார் பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பெறப்பட்ட புகார் அல்லது குற்றச்சாட்டை விசாரணை செய்து முடிக்க வேண்டும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. காவிரி நடுவர் மன்றம் எப்போது அமைக்கப்பட்டது?

**விடை : 1990**

**விளக்கம்:**

1. தமிழகத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த ஆணையம் முதலில் இடைக்காலத் தீர்ப்பையும் பின் 2007-ல் இறுதி தீர்ப்பையும் வழங்கியது.

இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கில் 2018 பிப்ரவரி 16-ல் உச்சநீதிமன்றம் இறுதி தீர்ப்பை அளித்தது.

2. இத்தீர்ப்பின் படி டெல்லியை தலைமையிடமாக கொண்டு காவிரி மேலாண்மை வாரியமும், பெங்களுரை தலைமையிடமாக கொண்டு காவிரி ஒழுங்காற்று குழுவும் அமைக்கப்பட்டது.
3. இதனால் 1990-ல் அமைக்கப்பட்ட காவிரி நடுவர்மன்றத்தை கலைப்பதற்கு மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

9. நூற்றாண்டு விழாவை கொண்டாட உள்ள பொது நூலகம் எது?

**விடை : சரஸ்வதி மகால்**

**விளக்கம் :**

1. இந்நூலகம் கி.பி. 1535 – 1675 ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் ஆண்ட நாயக்க மன்னர்கள் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டது. இந்நூலகத்தை மேம்படுத்தியதில் மன்னர் இரண்டாம் சரபோஜியின் பங்கு அதிகம்.

2. இந்நூலகம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1918 அக்டோபர் 5-ஆம் தேதி பொது நூலகமாக மாற்றப்பட்டது. இதன் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு கொண்டாடப்பட உள்ளது.

10. ஆசிய கண்டத்தில் காணப்படும் குறிஞ்சி மலர் வகைகள் எத்தனை?

**விடை : 150**

**விளக்கம்:**

1. இதில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 30 வகையான குறிஞ்சி மலர்கள் உள்ளன. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும் இந்த மலர்கள் தற்போது கோத்தகிரியை அடுத்த ரங்கசாமி மலைசரிவுகளில் பூத்துள்ளன.
2. குறிஞ்சி மலர்களில் தாவரவியல் பெயர் ஸ்ட்ரோ பிலாந்தஸ்

11. 2018 ஆம் ஆண்டில் எந்த மாநிலம் சுற்றுலா பயணிகள் வருகையில் முதலிடம் பெற்றதற்கான மத்திய அரசின் சான்றிதழை பெற்றது?

**விடை : தமிழ்நாடு**

**விளக்கம்:**

1. தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் வெல்லமண்டி என்.நடராஜன் இச்சான்றிதழை பெற்றார்.

12. சிறந்த நிர்வாகம் உள்ள மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது எது?

**விடை : கேரளா**

**விளக்கம் :**

1. இதில் தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகம், குஜராத் ஆகியவை முறையே 2-வது, 3-வது, 4-வது, 5-வது இடங்களைப் பெற்றுள்ளன.

13. எந்த ஊரின் கோவில் ஆபரணத்திற்கு புவிசார் குறியீட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது?

**விடை : நாகர்கோவில் (கன்னியாகுமரி)**

**விளக்கம் :**

1. நாகர்கோவில் அருகே உள்ள வடசேரியில் தயாரிக்கப்பட்ட டெம்பிள் ஜுவல்லரி என்கிற கோவில் ஆபரணத்திற்கு இக்குறியீடு வழங்கப்பட்டது.
2. வடசேரி பகுதியில் தான் தென்னிந்தியாவின் பல்வேறு கோவில்களுக்கு ஆபரணங்கள் தயாரிக்கப்பட்டு வரகின்றன.

14. தமிழ்நாடு மாநில வனக்கொள்கை 2018-ன் படி வனம், வனஉயிரின மேம்பாட்டிற்காக வனத்துறையின் நிதியிலிருந்து ஆண்டு தோறும் எத்தனை சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படும்?

**விடை : 2.5 சதவீதம்**

**விளக்கம்:**

1. சென்னையை அடுத்த வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா அறிவியல் பூங்காவில் தமிழ்நாடு மாநில வனக்கொள்கை 2018 புத்தகத்தை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட அதை மாநில வனத்துறை அமைச்சர் சி.சீனிவாசன் பெற்றுக் கொண்டார்.

15. மத்திய அரசானது முதுமலை புலிகள் காப்பகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை சுற்றுச்சூழல் உணர்மிகை மண்டலமாக அறிவித்துள்ளது. எந்த மாநிலத்தில், முதுமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ளது?

**விடை : தமிழ்நாடு**

# தேசிய நிகழ்வுகள்

1. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுசிலின் வழக்குரைஞராகப் பதிவு செய்ய முதல் திருநங்கை யார்?

**விடை : சத்யஶ்ரீ சர்மிளா**

**விளக்கம் :**

1. ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த இவரே முதல் திருநங்கை வழக்குரைஞர் ஆவார்.
2. நாட்டின் முதல் திருநங்கை உதவி ஆய்வாளராக பிரித்திகா யாஷினி அண்மையில் பதவியேற்றார்.

2. மும்பையில் எந்த வகையான கட்டிக்கலைக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கியுள்ளது?

**விடை : விக்டோரியா கோத்திக் கலை பாணி**

**விளக்கம் :**

1. இம்முறையில் 19 நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட பழைய தலைமை செயலகம், உயர்நீதிமன்றம், வாட்சன் ஹோட்டல் மற்றும் தி எல்பின்ஸ்டன் கல்லூரி உள்ளிட்டவைக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கியுள்ளது.
2. இதுவரை இந்தியாவில் மொத்தம் 27 சின்னங்கள் யுனெஸ்கோவால அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3. யுனெஸ்கோவின்,
   - தலைமையின் : பாரீஸ் (பிரான்ஸ்)
   - தலைமை இயக்குனர் : ஆட்ரி அசூலே.

3. உலக பாரம்பரிய இடங்களில் 37-வது இந்திய சின்னமாக UNESCO-ஆல் அறிவிக்கப்பட்டது எது?

**விடை : Victorian and Art Deco Ensembles of Mumbai**

**விளக்கம்**

1. இதன் மூலம் UNESCO-ஆல் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு இடங்களை கொண்ட நகரம் என்ற பெருமையை மும்பையை பெற்றுள்ளது.
2. ஏற்கனவே மும்பை நகரிலுள்ள “அகமதாபாத்” பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது குறிப்பிட்டத்தக்கது.
3. Victorian and art deco ensembles of Mumbai என்ற பெயர் “Victorian Gothic and art deco ensembles of Mumbai – என மாற்றப்பட உள்ளது.

4. RIMPAC –ல் பயிற்சி மேற்கொண்ட எந்த இந்தியக் கப்பல் கண்டுபிடிப்பு போட்டியில் விலகியது?

**விடை : INS Sahyadri**

**விளக்கம் :**

1. RIMPAC – Rim of the Pacific Exercise
2. RIMPAC-ன் 26-வது பதிப்பில் 25 நாடுகளிலிருந்து பல்வேறு கப்பல்கள் பயிற்சி போட்டியில் ஈடுபட்டன.

5. மாநில மின் அமைச்சர்கள் மாநாடு எங்கு நடைபெற உள்ளது?

**விடை : சிம்லா**

**விளக்கம் :**

1. ஹிமாச்சலப் பிரதேசத்தின் கோடைக்கால தலைநகரான சிம்லாவின் நாளை (ஜூலை 3) இந்த மாநாடு நடைபெற உள்ளது.
2. இதனை மத்திய மின் துறை அமைச்சர் ஸ்ரீ R.K. சிங் துவங்கி வைக்க உள்ளார்.

6. PMSMA திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்திய முதல் மாநிலம் எது?

**விடை : ஹிமாச்சலப் பிரதேசம்**

**விளக்கம் :**

1. PMSMA – Pradhan Mantri Surakshit Matritva Abhiyan
2. மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா அவர்கள் மாநில சுகாதாரத் துறையின் கூடுதல் தலைமை செயலரான B.K. அகர்வாலுக்கு விருதை வழங்கினார்.

7. இந்திய கடற்படையின் 14 ஆவது தலைமை தளபதி யார்?

**விடை : ஜே.ஜி. நட்கர்னி**

**விளக்கம் :**

1. இந்திய கடற்படை முன்னாள் தலைமை தளபதியான இவர் நேற்று (ஜுலை 2) காலமானார்.
2. 86 வயதான இவர் தைராய்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

8. வீட்டில் இருந்தபடியே வருவாய்த்துறை சான்றிதழ்களைப் பெறுவதற்கான புதிய செயலி எது?

**விடை : UMANG**

**விளக்கம் :**

1. தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் மூலம் செல்லிடப்பேசி ஆளுமைக்கான இந்த செயலி தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது.
2. இந்தச் செயலியில் வருவாய்த் துறையைச் சேர்ந்த சேவைகளான ஜாதி சான்றிதழ், வருவாய் சான்றிதழ், இருப்பிடத் சான்றிதழ் மற்றும் பிறப்பிடச் சான்றிதழ் ஆகிய சேவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

9. தேர்தல் விதிமீறல்கள் தொடர்பான புகார்களைத் தெரிவிக்க உருவாக்கப்பட்ட புதிய செயலி எது?

**விடை : சி விஜில் (c VIGIL)**

**விளக்கம் :**

1. வாக்காளர்களுக்கு பணம் வழங்குவது, வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் பேசுவது உள்ளிட்ட பல்வேறு வகையான தேர்தல் விதிமீறல்களை வீடியோ, புகைப்படங்கள் மூலம் இந்தச் செயலி வாயிலாக தேர்தல் ஆணையத்துக்கு உடனடியாகத் தெரிவிக்க முடியும்.
2. இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் இம்முறை நடைமுறைக்கு வர இருக்கிறது.

10. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சந்திர கிரகணம் எப்போது நடைபெற உள்ளது?

**விடை : ஜுலை 27**

**விளக்கம் :**

1. ஜுலை 27 அன்று நள்ளிரவில் சுமார் 1 மணி நேரம் 43 நிமிடங்கள் இந்தக் கிரகணம் நீடிக்கும்.
2. அப்போது நிலவு இருள் சூழ்ந்தும், அதன் சுற்றுப்புறங்கள் அனைத்தும் சிவப்பு நிறத்திலும் காட்சியளிக்கும். இந்த அதிசய நிகழ்வை 'பிளட் மூன்' (Blood Moon) என அழைப்பார்கள்.

11. நாட்டின் முதல் காதி மால் (Khadi Mall) எங்கு துவங்கப்பட உள்ளது?

**விடை : ஜார்க்கண்ட்**

**விளக்கம் :**

1. ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராணிகன்ச் பகுதியில் அமைக்கப்படும் இந்த காதி மால் விரைவில் திறக்கப்பட உள்ளதாக அம்மாநில முதல்வர் ரகுபர் தாஸ் கூறினார்.

12. மக்களவையில் எம்பிக்களுக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக எத்தனை கேள்விகள் வரை கேட்பதற்கு அனுமதிக்கப்படும் என மக்களவை தலைமை செயலாளர் கூறியுள்ளார்?

**விடை : 5**

**விளக்கம் :**

1. இதற்கு முன் 10 கேள்விகள் வரை கேட்க அனுமதிக்கப்பட்டு வந்தது. இதனை 5 கேள்விகளாக குறைத்து மக்களவை தலைமை செயலாளர் ஸ்நேகலதா ஸ்ரீ வஸ்தவா அறிக்கை வெளியிட்டுள்ளார். இது வருகின்ற மழைக்கால கூட்டுத்தொடர் முதல் நடைமுறைக்கு வருகிறது.
2. கூடுதலாக கேள்விகள் எழுப்புவதற்கு கோரிக்கை விடுத்தால் அந்த கேள்விகள் அடுத்தநாள் அனுமதி வழங்கப்படும்

13. ஆதார் அடிப்படையில் உடனடியாக பான் எண் (PAN NUMBER) வழங்கும் புதிய திட்டத்தை மத்திய வருமானத் வரித்துறை, எந்த இணையதளத்தின் மூலம் மக்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது?

**விடை : http://www.incometaxindiafilling.gov.in**

**விளக்கம் :**

1. இந்த இணைய தளம் வாயிலாக விண்ணப்பித்த ஓரிரு நிமிடங்களில் நிரந்தர கணக்கு எண் (PAN NUMBER) –ஐ விண்ணப்பதாரர்கள் பெற முடியும்.
2. அதற்கடுத்த சில நாட்களில் அச்சிடப்பட்ட பான் அட்டை (PAN Card) சம்பந்தப்பட்டவர்களின் வீட்டு முகவரிக்கு அஞ்சல் வழியே அனுப்பி வைக்கப்படும்.

14. இராமாணயத்தை உருது மொழியில் மொழிபெயர்த்த முஸ்லீம் பெண் யார்?

**விடை : மஹி தலத் சித்திக்**

**விளக்கம் :**

1. மத நல்லிணகத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இராமாயணத்தை உருது மொழியில் மொழி பெயர்த்ததாக உத்திரப்பிரதேசத்தை சேர்ந்த இவர் கூறியுள்ளார்.

15. இந்தியாவில் தாய்மொழியாக பேசப்பட்டு வரும் மொழிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை : 19, 569**

**விளக்கம் :**

1. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 19,569 மொழிகள் இந்திய மக்களால் தாய்மொழியாகப் பேசப்பட்டாலும், 121 மொழிகள் மட்டுமே 10,000-திற்க்கும் அதிகமான மக்களால் பேசப்பட்டு வருகிறது.
2. நமது நாட்டில் மக்கள்தொகையில் அரசியலமைப்பின் 8-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ள 22 மொழிகளை 96.71 சதவீதம் பேர் பேசி வருகின்றனர்.
3. அரசியலமைப்பு சட்டத்தின் 8-வது அட்டவணையில் அசாமி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், தமிழ், காஷ்மீரி உள்ளிட்ட 14 மொழிகள் அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தபோதே இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றிருந்தன.
4. சிந்தி மொழி 1967-விலும், கொங்கனி, மணிபுரி, நேபாளி மொழிகள் 1992-விலும் போடோ, டோக்ரி, மைதீலி, சந்தாலி மொழிகள் 2003-ம் ஆண்டிலும் 8-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டனர்.

16. விவசாயிகளுக்காக “சூரிய கிஷன் யோஜனா சக்தி விவசாயி” (Suryashakti Kisan Yojana (SKY)) திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை : குஜராத்**

**விளக்கம் :**

1. குஜராத் முதல்வாரன விஜய்ருபானி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி விவசாயிகளின் மின் உற்பத்தி மேற்கொள்ளலாம் மற்றும் உபரிமின்சாரத்தை மின்கட்டமைப்புக்கு விற்கலாம்.

17. மாநிலம் முழுமைக்கும் பசுமை பரப்பை அதிகரிக்க ‘i – Hariyali’ என்ற செயலியை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?

**விடை : பஞ்சாப்**

**விளக்கம் :**

1. சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக அதிக அளவிலான மரக்கன்றுகளை நட பொது மக்களை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.
2. இந்த செயலின் மூலம் ஒருவருக்கு அதிகபட்சம் 25 மரக்கன்றுகள் வழங்கப்படும்.

18. விவசாயிகளின் வருமானத்தை எந்த ஆண்டுக்குள் இரட்டிப்பாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது?

**விடை : 2022**

**விளக்கம் :**

1. இதற்காக, மத்திய அரசு 4-அம்ச திட்டத்தை வெளியிட்டுள்ளது. அவை முறையே
   - பயிடுவதற்கு ஆகும் செலவைக் குறைத்தல்
   - பயிர்களுக்கு உரிய விலைக்கொடுத்தல்
   - அறுவடைக்கு பிறகு ஏற்படும் இழப்புகளைக் குறைத்தல்
   - பொருள்களை விற்க கூடுதல் மையங்களை ஏற்படுத்துதல்

19. “கன்யா வன் சம்ருதி யோஜனா” என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ள மாநில அரசு எது?

**விடை : மகாராஷ்டிரா**

**விளக்கம் :**

1. “கன்யா வன் சம்ருதி யோஜனா” என்ற திட்டத்தின் படி விவசாயிகள் குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைகளுக்கும் ஒரு மரக்கன்று தரப்படும்.
2. அதிகப்பட்சம் 2 பெண் குழந்தைகளுக்கு இது பொருந்தும்.
3. தென்னை, மா, பலா உள்ளிட்ட பல்வேறு வகைகளில் வழங்கப்படும் மரங்களின் மூலம் பெறப்படும் வருமானம் அந்த பெண் குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்கும்.

20. இந்தியாவின் எந்த மாநிலத்தின் அதிக UNESCO உலக பாரம்பரிய தளங்கள் உள்ளன?

**விடை : மகாராஷ்டிரா**

**விளக்கம் :**

1. இம்மாநிலத்தில் 5 UNESCO உலக பாரம்பரிய தளங்கள் உள்ளன. அவை முறையே அஜந்தா குகைகள், எல்லோரா குகைகள், எலி∴பெண்டா குகைகள், சத்ரபதி சிவாஜி மகாராஜ் முனையம் மற்றும் விக்டோரியா கோத்திக் ஆகியவை அடங்கும்.

21. மெர்சரின் 24-வது வாழ்க்கைச்செலவின கருத்துக்கணிப்பின் (Cost of Living Survey) படி இந்தியாவின் மிகவும் விலையுயர்ந்த நகரம் (Most Expensive City) எது?

**விடை : மும்பை**

**விளக்கம் :**

1. இப்பட்டியலில் மும்பை 55-வது இடத்திலும் புதுடெல்லி 103-வது இடத்திலும், சென்னை 144-வது இடத்திலும் உள்ளன.
2. கொல்கத்தா 182-வது இடத்தையும் பெங்களூரு 170-வது இடத்தையும் பிடித்து இந்தியாவின் மிகக் குறைந்த விலையுயர்ந்த நகரங்களாக இடம்பிடித்துள்ளன.
3. ஹாங்காங் நகரம் இப்பட்டியலில் முதலிடம் பிடித்து உலகின் விலையுயர்ந்த நகரமாக தேர்வு பெற்றுள்ளது.

4. டோக்கியோ சூரிச், சிங்கப்பூர், சியோல் ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.

22. 2011-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்குகெடுப்பின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்ட தரவுகளின் படி, இந்தியாவில் அதிகம் பேசப்படும் மொழி எது?

**விடை : ஹிந்தி**

**விளக்கம் :**

1. இந்தியாவில் அட்டவணைப்படுத்தப்பட்ட 22 மொழிகளை பேசுபவர்களை அடிப்படையாகக் கொண்டு இப்புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.
2. 2001-ம் ஆண்டு 41.03 சதவீதமாக இருந்த ஹிந்தி பேசுபவர்களின் எண்ணிக்கை 2011-ம் ஆண்டில் 43.63 சதவீதமாக அதிகரித்துள்ளது.
3. ஹிந்தியை தொடர்ந்து மிக அதிகமானவர்கள் பேசும் மொழிகளின் பட்டியலில் வங்காளம் இரண்டாவது இடத்திலும், மராத்தி, தெலுங்கு முறையே மூன்று மற்றும் நான்காவது இடத்தை பிடித்துள்ளன.
4. 5.∴89 சதவீதத்துடன் தமிழ் 5-வது இடத்தை பிடித்துள்ளது. மிக குறைவானவர்கள் பேசும் மொழியாக சமஸ்கிருதம் உள்ளது.

23. எந்த நாட்டில் உலகின் முதல் சர்வதேச மனிதநலன் சார்ந்த தடயவியல் மையம் (International Centre for Humanitarian Forensics) தொடங்கப்பட்டுள்ளது?

**விடை : இந்தியா**

**விளக்கம் :**

1. குஜராத் மாநிலம் காந்திநகரில் இம்மையம் தொடங்கப்பட்டுள்ளது.
2. இந்தியா, பூடான், நேபாளம், மாலத்தீவு மற்றும் குஜராத் தடயவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உள்ள செஞ்சிலுவை சங்கத்தின் பிராந்திய பிரதிநிதிகளின் கூட்டு நிறுவனம் ஆகும்.

24. UNESCO – விளையாட்டு பல்கலைக்கழகத்தை (Design university for Gaming) எங்கு அமைக்க உள்ளது?

**விடை : ஆந்திர பிரதேசம்**

**விளக்கம் :**

1. ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினம் எனும் இடத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் இது அமைய உள்ளது.
2. இதற்கு UNESCO ஆந்திராவின் பொருளாதார வளர்ச்சி வாரியத்துடன் (APEDB – Andhra Pradesh Economic Development Board) ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
3. இதன் மூலம் “Gaming Digital Learning Hub” ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

25. மின்வணிக பணிக்குழுவின் (e-Commerce Task Force) முதல் கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை : புதுடெல்லி**

**விளக்கம் :**

1. இதனை வர்த்தக செயலாளர், ரிடா தியோதியா (Rita Teaotia) தலைமை ஏற்று நடத்தினார்.
2. இதில் பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டு மின்வணிக வளர்ச்சி பற்றிய கருத்துக்களை கலந்தாலோசித்தனர்.

26. சிவில் விமான ஆராய்ச்சி மையம் (CARO – Civil Aviation Research Centre) எங்கு அமைய உள்ளது?

**விடை : ஹைதராபாத்**

**விளக்கம் :**

1. ஹைதராபாத்திலுள்ள பேகம்பேட்டில் (Begumpet), ரூ.250 கோடி செலவில் CARO, 18 மாதங்களுக்குள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் சுரேஷ் பிரபு இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

3. மேலும், உள்நாட்டு விமான போக்குவரத்துச் சேவை 20 சதவீதம் அதிகரித்து உள்ளதாகவும், இது மேலும் தொடரும் எனவும் சுரேஷ் பிரபு கூறினார்.

27. சீனாவுக்கு வெளியில் வளர்ந்து வரும் சந்தையில் எந்த வங்கி மிகவும் மதிப்பு வாய்ந்த வங்கி?

**விடை : HDFC வங்கி**

**விளக்கம் :**

1. HDFC வங்கியின் தற்போதைய சந்தை மதிப்பு 78.4 பில்லியன் டாலர் ஆகும்.
2. உலகின் தலைசிறந்த 500 மதிப்புமிக்க நிறுவனங்களில், HDFC வங்கி, ஹவுசிங் டெவலப்மண்ட் பினான்ஸ் கார்போரேஷன், கொடாக் மஹிந்திரா மற்றும் SBI ஆகிய 4 இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

28. இந்தியாவின் BHEL நிறுவனம், உக்கிரைனின் எந்த நிறுவனத்துடன் இணைந்து போர்க்கப்பல்களுக்கான டர்பைன்களைத் தயாரிக்க உள்ளது?

**விடை : Zorya Mashproekt**

**விளக்கம் :**

1. இந்திய கடற்படையிலுள்ள 34 போர்க்கப்பல்கள், Zorya டர்பைன்களைக் கொண்டு விரைவில் இயக்கப்படவுள்ளது.
2. ஒவ்வொரு டர்பைனும் 30,000 மணி நேர செயல்பாட்டிற்குப் பின் மாற்றப்படும்.

29. “Sambal Yojana” என்ற மின் மானியத் திட்டத்தை அறிமுமகப்படுத்திய மாநிலம் எது?

**விடை : மத்தியப் பிரதேசம்**

**விளக்கம் :**

1. இத்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஏழை குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூ.200 –க்கு மின்சாரம் வழங்கப்படும்.
2. இதுவரை ஒரு கோடியே 83 லட்சம் பேர் மத்தியப் பிரதேசத்தில் பதிவு செய்துள்ளனர்.

30. தேசிய சுகாதார சுயவிவரப் பட்டியல் 2018-ன் படி 2017-ல் 100 சதவீத இறப்பை ஏற்படுத்தக்கூடிய நோயாக எது விளங்குகிறது?

**விடை : வெறிநாய் கடி (ரேபிஸ்)**

**விளக்கம் :**

1. கடந்த 2016-ல் இந்தியாவில் வெறிநாய்க் கடியால் (ரேபிஸ்) இறந்தவர்கள் 4,370 பேர். இது உலக அளவில் ரேபிஸ் நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கையில் 3-ல் 1 பங்கு ஆகும்.
2. 2010-ல், ரேபிஸால் பாதிக்கப்பட்ட இந்தியர்கள் 6 பேர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

31. "Arth – Art for Earth" என்ற தலைப்பில் கண்காட்சியை துவங்கி வைத்தவர் யார்?

**விடை : டாக்டர் மகேஷ் சர்மா**

**விளக்கம் :**

1. இவர் மத்திய பண்பாடு மற்றும் கலாச்சார துறை அமைச்சர் ஆவார்.
2. புது டெல்லியிலுள்ள IGNCA (Indira Gandhi National Centre for the Arts) –ல், "Arth – art for earth" என்ற தலைப்பிலான கண்காட்சியை இவர் துவங்கி வைத்தார்.
3. "Arth – art for earth" என்பது மனவ் குப்தா எழுதிய சுற்றுச்சூழல் கலை நிறுவலின் தொகுப்பு ஆகும்.

32. அகமதாபாத் நகரத்திற்கு பிறகு UNESCO-வின் உலக பாரம்பரிய தலங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்ட 2-வது இந்திய நகரம் எது?

**விடை : மும்பை**

**விளக்கம் :**

1. 29 கலாச்சார பண்பாட்டு தலங்கள், 07 இயற்கையான தலங்கள் மற்றும் 1 கலப்பு வகை தலங்களுடன் மொத்தம் 37 தலங்களை தற்போது இந்தியா கொண்டுள்ளது. ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் அதிக உலக பாரம்பரிய தலங்களைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2-வது இடத்திலும் உலகளவில் ஆறாவது இடத்திலும் உள்ளது.
2. அண்மையில் UNESCO-வால் உலக பாரம்பரிய தளங்களாக அறிவிக்கப்பட்ட விக்டோரிய கோதிக் மற்றும் ஆர்ட்டெகா ஆகியவை இந்தியாவின் மும்பை நகரத்தில் அமைந்துள்ளன.
3. பக்ரைன் நாட்டில் உள்ள மனாமா நகரில் UNESCO உலக பண்பாட்டு குழுவின் 42-வது கூட்டம் நடந்தது.

- தலைமையிடம் : பாரீஸ் (பிரான்ஸ்)

- தலைமை இயக்குனர் : ஆட்ரி அசூலே.

33. எந்த நிறுவனத்தால் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் புதிய டிஜிட்டல் திட்டமான இந்தியாவின் தேசிய மின்னணு நூலகம் (NDLI – National Digital Library of India) என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது?

**விடை : IIT கரக்பூர்**

**விளக்கம் :**

1. புது டெல்லியில் நடைபெற்ற தேசிய வாசிப்பு தின நிகழ்ச்சியில், மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், மனித வள மேம்பாட்டமைச்சகத்தின் "தேசிய மின்னணு நூலகம் (NDLI – National Digital Library of India) என்ற டிஜிட்டல் திட்டத்தை தொடங்கிவைத்தார்.
2. IIT கரக்பூரால் உருவாக்கப்பட்ட இந்த தேசிய மின்னணு நூலகமானது இந்தியா மற்றும் அயல் நாடுகளைச் சேர்ந்த முதன்மை கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய வளங்களில் இருந்து மேனிலை தரவுகளை (Metadata) சேகரித்து இணைக்கும் ஓர் ஒற்றை சாளர தளமாகும். இது உரைநூல்கள், கட்டுரைகள், காணொளிகள், ஒலி நூல்கள், விரிவுரைகள், உருவகப்படுத்துதல்கள் மற்றும் அனைத்து பிற ஊடகங்களையும் கொண்டிருக்கும் ஒரு மின்னணு வைப்பகமாகும்.
3. nd.iitkgp.ae.in என்ற இணையதளத்தின் வாயிலாக இந்த நூலகத்தை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

34. வேளாண்மை மற்றும் MGNREGS (The Mahatma Gandhi National Rural Employment Guarantee Act 2005) -ன் கொள்கை அணுகுமுறைகளை ஒருங்கிணைக்க முதலமைச்சர்கள் துணைக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. எந்த மாநிலத்தின் முதலமைச்சர் இந்த துணைக்குழுவின் அமைப்பாளராக இருப்பார்?

**விடை : மத்தியப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. வேளாண்மை மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) கொள்கை அணுகுமுறைகளை ஒருங்கிணைக்க முதலமைச்சர்கள் துணைக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

35. சமூக காரணிகளின் அடிப்படையில் பஞ்சாயத்துகளை வரிசைப்படுத்துவதற்காக 7-ஸ்டாார் கிராம பஞ்சாயத்து வானவில் திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை : ஹரியானா**

**விளக்கம் :**

1. ஏழு சமூக காரணிகளின் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்துகளுக்கு நட்சத்திர தரவரிசை வழங்குவதற்காக “7-நட்சத்திர கிராம பஞ்சாயத்து வானவில் (7-Star Gram Panchayat Rainbow) திட்டத்தை ஹரியானா மாநில அரசு தொடங்கியுள்ளது. பாலின விகிதம், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிர்வாகம் மற்றும் சமூக பங்கேற்பு ஆகிய காரணிகளின் அடிப்படையில் பஞ்சாயத்துகளுக்கு நட்சத்திர தரவரிசை வழங்கப்படும்.
2. 2018 ஜனவரியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இத்திட்டத்தின் கீழ் ஹரியானா மாநிலத்தில் தோரயமாக 1120 கிராமங்களுக்கு நட்சத்திர தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.
3. இந்நட்சத்திர தரவரிசையில் 407 நட்சத்திரங்களுடன் அம்பாலா மாவட்டம் முதலிடத்திலும், 199 நட்சத்திரங்களுடன் குருகிராம் இரண்டாமிடத்திலும், 75 நட்சத்திரங்களுடன் கர்னல் மாவட்டம் மூன்றாமிடத்திலும் உள்ளன.

36. உயர் கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வுகளை அடுத்த கல்வி ஆண்டு முதல் நடத்த உள்ள அமைப்பு எது?

**விடை : NTA (National Testing Agency)**

**விளக்கம் :**

1. புது டெல்லியில், பத்திரிக்கையாளர்களுடன் நடந்த கூட்டத்தில் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜவடேகர் இச்செய்தியினைக் கூறினார்.

37. வரலாற்று ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் முக்கியமான சுற்றுலா தலங்களை ஒருங்கிணைக்க இந்தியாவுடன் கைகோர்த்துள்ள நாடு எது?

**விடை : நேபாளம்**

**விளக்கம் :**

1. இதற்காக இரு நாடுகளும் இணைந்து "industry – led Indo- Nepal Tourism Forum" என்ற அமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளன.
   - தலைநகர் : காத்மண்ட்
   - நாணயம் : நேபாள ரூபாய்
   - அதிபர் : வித்யா தேவி பண்டாரி
   - பிரதமர் : காட்கா பிரசாத் ஒலி

38. "Data for New India" என்ற தலைப்பிலான சர்வதேச வட்டமேசை மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை : புது டெல்லி**

**விளக்கம் :**

1. ஜூலை 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இந்த மாநாட்டை இந்தியாவின் MOSPI (The Ministry Statistics & Programming Implementation) நடத்தியது.
2. இந்தியாவில் முதன் முறையாக நடைபெறும் இத்தகைய மாநாட்டை MOSPI அமைச்சர் D.V. சதானந்த கௌடா துவங்கி வைத்தார்.
3. இம்மாநாட்டில் இந்தியாவின் புள்ளியல் அமைப்பை மேம்படுத்துவதற்கான புதுக்கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

39. தேசிய பசுமை தீர்ப்பாயம் எப்போது உருவாக்கப்பட்டது?

**விடை : 2010**

**விளக்கம் :**

1. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனங்கள் மற்றும் இதர வளங்களை பாதுகாப்பது தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்க இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.
2. இதன் முதன்மை அமர்வு டெல்லியில் உள்ளது. மண்டல அமர்வுகள் போபால், புனே, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

40. டெல்லி IIT உட்பட 6 கல்வி நிறுவனங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

**விடை : மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்**

**விளக்கம் :**

1. இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில் கீழ்க்கண்ட 6 கல்வி நிறுவனங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டதாக மத்திய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் அறிவித்துள்ளார்.
   - டெல்லி IIT
   - மும்பை IIT
   - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc), பெங்களூரு
   - மணிபால் உயர்கல்வி அகாடெமி
   - பிட்ஸ் பிலானி உயர்கல்வி நிறுவனம்
   - ஜியோ கல்வி நிறுவனம்

41. காதி பொருள்களை விற்பனை செய்வதற்காக எந்த மாநில அரசு Flip kart நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்ய உள்ளது?

**விடை : உத்திரப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. உத்திரப்பிரதேச முதல்வாரன யோகி ஆதித்யாநாத் இதனை தெரிவித்துள்ளார்.
2. ஏற்கெனவே உத்திரப்பிரதேச அரசு அமேசான் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துள்ளது.
3. காதி உற்பத்திக்காக உத்திரப்பிரதேசத்தில் உள்ள ரே பரேலியில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்விநிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

42. வடகிழக்கு கவுன்சிலின் 67-வது கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை : ஷில்லாங் (மேகலாயா)**

**விளக்கம் :**

1. இக்கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையிலும், வடகிழக்கு பிராந்திய வளர்ச்சி துறையின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் முன்னிலையில் நடைபெற்றது.
2. வடகிழக்கு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் மற்றும் ஆளநர்களுடன் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் விவாதிக்க உள்ளார்.

43. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் நாடாளுமன்றத்தில் எப்போது நிறைவேற்றப்பட்டது?

**விடை : 2013**

**விளக்கம் :**

1. இந்த சட்டத்திற்கு அப்போதைய குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களால் 2014 ஜனவரி மாதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

2. லோக்பால் என்பது மத்திய அமைச்சர், மத்திய அரசு அதிகாரிகள் உள்ளிட்ட மத்திய அரசு சார்ந்தவர்களில் ஊழல் புகார் குறித்து விசாரிக்கும் ஒரு அமைப்பு ஆகும். லோக் ஆயுக்தா என்பது மாநில அரசு சார்ந்தவர்களின் ஊழல் புகார் குறித்து விசாரிக்கும்.

3. ஜம்முகாஷ்மீர், மணிப்பூர், மேகலாயா, மிசோரம், நாகலாந்து, புதுச்சேரி, தமிழ்நாடு, தெலுங்கானா, திரிபுரா, அருணாச்சலப்பிரதேசம், டெல்லி மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் லோக் ஆயுக்தா அமைப்பு அமைக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தது.

4. இதன்படி தமிழ்நாட்டில் ஜூலை 9-ல் லோக் ஆயுக்தா சட்டம் இயற்றப்பட்டது. இதனை ஏற்ற உச்சநீதிமன்றம் 2 மாதத்திற்குள் லோக் ஆயுக்தா அமைப்பை உருவாக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

44. அகில இந்திய அளவில் சிறப்பாக செயல்படும் மின்சார வாரியங்களின் தரவரிசையில் தமிழ்நாடு மின்சாரவாரியம் எத்தனையாவது இடத்தை பிடித்துள்ளது?

**விடை : 28**

**விளக்கம் :**

1. 22 மாநிலங்களில் உள்ள 41 மின்பகிர்மான நிறுவனங்களின் மின்விநியோகம், நிதிநிலைமை உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை மதிப்பீடு செய்து மத்திய அரசால் ஆண்டுதோறும் தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது.

2. இதன்படி 2014 – 15 நிதிஆண்டுக்கான பட்டியலில் சி.பிசினஸ் கிரேடுடன் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் 34 இடத்தில் இருந்தது.

3. 2015 – 16-ல் தமிழகம் பி கிரேடுடன் 25 இடத்திற்கு முன்னேறியது. 2016 – 17-ம் ஆண்டுக்கான தரவரிசைப்பட்டியில் பி கிரேடுடன் 28-வது இடத்தை பிடித்துள்ளது.

4. குஜராத்தை சேர்ந்த 3 மின்பகிர்மான நிறுவனங்கள் முதல் மூன்று இடத்திலும் நான்காவது இடத்தில் உத்தரகாண்டை சேர்ந்த நிறுவனமும் உள்ளது.

45. 8-ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு 'மகிழ்ச்சியான பாடத்திட்டம் - Happiness Curriculum' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அல்லது யூனியன் பிரதேச அரசு எது?

**விடை : டெல்லி**

**விளக்கம் :**

1. இதனை டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் புத்தமத தலைவர் தலாய்லாமா கலந்து கொண்டார்.

2. 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தினமும் 45 நிமிடம் இவ்வகுப்பு எடுக்கப்படும். இதில் 5 நிமிடம் தியானமும் உள்ளது.

3. இப்பாடத்திட்டத்தில் மன விழிப்புநிலைக்காக பயிற்சி, நன்றியுணர்வு, ஒழுக்கம் மற்றும் மதிப்பு அடிப்படையிலான கதைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது இந்த வகுப்பு.

46. எந்த நகரத்தில் இந்தியாவின் முதலாவது அதிநவீன மின்னணுக்கழிவு மறுசுழற்சி மையம் அமையவுள்ளது?

**விடை : பெங்களூர்**

**விளக்கம் :**

1. மத்திய இராசயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மத்திய நெகிழி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமானது பெங்களூரில் மின்னணு கழிவு மறுசுழற்சி மையத்தை அமைக்கஉள்ளது.
2. அரசு சார்பாக இந்தியாவிலேயே முதல்முறையாக அமைக்கப்படும் இந்த மறுசுழற்சி மையம் அடுத்த 4 மாதங்களில் செயல்பாட்டுக்கு வரும்.
3. இந்தியாவின் ஒட்டுமொத்த மின்னணு கழிவுகளில் அதிக கழிவுகளை உருவாக்கும் நகரங்களின் வரிசையில் மும்பை, டெல்லிக்கு அடுத்தப்படியாக பெங்களூரு 3-வது இடத்தில் உள்ளது. 2020-ஆம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுக்கழிவுகளின் அளவு 52 லட்சம் டன் அளவுக்கு இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

47. இந்தியாவின் சிறந்த பல் மருத்துவ கல்லூரி எது?

**விடை : மௌலானா ஆசாத் பல் மருத்துவ அறிவியல் நிறுவனம்**

**விளக்கம் :**

1. டெல்லி அரசின் கீழ் இயங்கும் மௌலானா ஆசாத் பல் மருத்துவ அறிவியல் நிறுவனம் தொடர்ந்து 7-வது ஆண்டாக சிறந்த பல் மருத்துவ கல்லூரி தரவரிசையில் முதலிடம் பெற்றுள்ளது.
2. மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுக்கான தேசிய தரசான்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் மற்றும் ஒரே நிறுவனம் இது ஆகும்.
3. ஆண்டுதோறும் 40 மாணவர்களுக்கு 5-ஆண்டு இளங்கலை பல் மருத்துவ படிப்பையும், முதுகலை பல் மருத்துவபடிப்பையும் கொண்ட ஒரே அரசு கல்லூரி இது ஆகும்.

48. இந்தியாவிலேயே முதல் கண்வங்கி எங்கு திறக்கப்பட்டது?

**விடை : எழும்பூர் கண்மருத்துவமனை**

49. ‘அண்ணா கேன்டீன்’ திட்டம் எந்த மாநிலத்தில் துவங்கப்பட்டது?

**விடை : ஆந்திர பிரதேசம்**

**விளக்கம் :**

1. இந்த திட்டத்தை அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு விஜயவாடாவில் உள்ள பவானிபுரம் என்னுமிடத்தில் தொடங்கி வைத்தார்.
2. காலை, மாலை இரவு என மூன்று நேரமும் மலிவு விலையில் (ரூ.5) உணவு வழங்கும் இவ்வகையான உணவகம் முதற்கட்டமாக 60 இடங்களில் திறக்கப்பட்டது.

50. கூலித் தொழிலாளர்கள் மற்றும் ஏழைக்குடும்பங்களின் நிலுவையில் உள்ள மின்சாரக்கடனை தள்ளுபடி செய்ய ‘சாம்பல்’ எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

**விடை : மத்தியப் பிரதேசம்**

**விளக்கம் :**

1. இத்திட்டத்தின் நோக்கம் மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களும் மின்சார வசதியுடன் உள்ளதை உறுதி செய்வதே ஆகும்.
2. இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்துள்ள அமைப்புசார தொழிலாளர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200 என்ற விலையில் மின்சாரம் வழங்கப்படும் மேலும், பயனாளிகளுக்கு மின்னிணைப்பும் இலவசமாக வழங்கப்படும்.
3. ஒரு வேளை பயன்பாட்டு தொகை ரூ.200-க்கு குறைவான இருந்தால், பயனாளிகள் கட்டண தொகையை செலுத்த வேண்டும். பயன்பாட்டு தொகை ரூ.200-க்கு அதிகமாக இருந்தால் மீதித்தொகை மாநில அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்படும்.

51. “அனைவருக்கும் வீடு” வழங்கும் PMAY திட்டத்தின் இலக்கு எந்த ஆண்டிற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்?

**விடை : 2022**

**விளக்கம் :**

1. PMAY – Pradhan Mantri Awas Yojana
2. இத்திட்டத்தின் கீழ் வரும் 2022-க்குள் 51 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

52. ISCF and ISCI Program –யாரால் துவங்கப்பட்டது?

**விடை : ஹர்தீப் S புரி**

**விளக்கம் :**

1. ISCF – India Smart Cities Fellowship Program
2. ISCI – India Smart Cities Internship Program

53. இந்தியாவில் முதன் முதலாக “இந்திய சுற்றுலா சந்தை” (India Tourism Mart) எங்கு நடத்தப்பட உள்ளது?

**விடை : புது டெல்லி**

**விளக்கம் :**

1. டெல்லியில் உள்ள விஜய பவனில் வரும் செப்டம்பர் 16 முதல் 18 வரை நடைபெற உள்ளதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் K.J. அல்போன்ஸ் கூறினார்.
2. இதன் மூலம் சுற்றுலா மற்றும் தொழில்துறையிலுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் வணிக வாய்ப்புகளை வழங்க முடியும்.

54. உலகளாவிய கண்டுபிடிப்பு தரவரிசையில் (GII – Global Innovation Index) இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை : 57**

**விளக்கம் :**

1. கடந்த ஆண்டு 60 ஆம் இடத்தில் இருந்த நம்நாடு 3-இடங்கள் முன்னேறி தற்போது 57-வது இடத்தில் உள்ளது.
2. கடந்த 2015-ல் 81-வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

55. சுரங்கங்கள் மற்றும் கனிமங்களின் 4-வது தேசிய கூட்டம் எப்போது நடைபெற்றது?

**விடை : ஜூலை 13, 2018**

**விளக்கம் :**

1. மத்திய கனிமளவளத்துறை அமைச்சர் ஸ்ரீ நரேந்திர சிங் டோமர் இந்தூரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

56. Ease of Doing Business –ல் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

**விடை : ஆந்திர பிரதேசம்**

**விளக்கம் :**

1. தொழில் செய்ய ஏற்ற மாநிலங்களின் தரவரிசைப்பட்டியல் நியூ டெல்லியில் வெளியிடப்பட்டது.
2. இதில் ஆந்திரா முதலிடமும், தெலுங்கானா, ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் முறையே 2, 3, 4 மற்றும் 5-ஆம் இடங்களையும் பெற்றுள்ளன.

57. CIPET : Centre for Skilling & Technical Support (CSTS) –யை துவங்கி வைத்தவர் யார்?

**விடை : ஸ்ரீ அனந்த்குமார் (மத்திய ரசாயன மற்றும் உரங்கள் துறை அமைச்சர்)**

**விளக்கம் :**

1. CIPET – Central Institute of Plastic Engineering & Technology
2. டேராடூனில், தொய்வாலாவில் (Doiwala) இவர் புதிய CIPET கட்டிடத்தை நிறுவ அடிக்கல் நாட்டினார்.
3. இது நம் நாட்டின் 32-வது CIPET மையமாகும்.

58. எந்த மாநிலம், மாணவர்களுக்கு டிஜிட்டல் பயிற்சியை அளிக்க மைக்ரோசாஃப்ட் உடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

**விடை : ராஜஸ்தான்**

**விளக்கம் :**

1. இதன் மூலம் ராஜஸ்தான் அரசு 9500 மாணவர்களுக்கு 1 வருடத்திற்குள் இலவச டிஜிட்டல் கல்விச் சேவையை வழங்கிட முடிவு செய்துள்ளது.

59. "Jal Bachao, Video Banao, Puruskar Pao" என்ற தலைப்பிலான வீடியோ போட்டியை நடத்தும் அமைப்பு எது?

**விடை : மத்திய நீர்வளத்துறை மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்**

**விளக்கம் :**

1. இதன் மூலம் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீர் மேலாண்மை மற்றும் சேமிப்பு பற்றிய வீடியோக்களை வெளியிடும் நபர்களில் 3 பேர் தேர்வு செய்யப்பட்டு பரிசு அளிக்கப்படுவார்கள்.
2. இப்போட்டியை MyGov Portal உடன் இணைந்து நடத்த உள்ளது.
3. வெற்றியாளர்கள் நவம்பர் 4, 2018 வரை, 2 வாரங்களுக்கு ஒருமுறை தேர்வு செய்யப்படுவார்கள்.

60. இந்திய தொல்பொருள் ஆய்வுகளின் (ASI) தலைமையிடத்தை பிரதமர் நரேந்திர மோடி எங்கு துவங்கி வைத்தார்?

**விடை : தில்க் மார்ஜ், புது டெல்லி**

**விளக்கம் :**

1. ASI – Archaeological Survey of India
2. மத்திய தொல்பொருள் நூலகத்தை உள்ளடக்கிய (1.5 லட்சம் புத்தகங்கள்) இதனை ஜூலை 12 அன்று மோடி துவங்கி வைத்தார்.

61. எந்த மாநில அரசின் பொதுமக்களின் கல்விநிலை தொடர்பாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பு பணியில் திருநங்கைகள் ஈடுபட்டனர்?

**விடை : கேரளா**

**விளக்கம் :**

1. மாநிலத்தின் தலைநகரான திருவனந்தப்புரத்தில் பொதுமக்களின் கல்விநிலை குறித்து கணக்கெடுப்பதற்காக கேரளா அரசு 14, 318 தன்னார்வலர்களை பணியில் அமர்த்தியது.
2. இதில் ஸ்ரீலீச்சு, சகீனா, கீர்த்தி, அஸ்மா என்ற நான்கு திருநங்கையர்க்ள தன்னார்வலர்களாக தங்களை இணைத்து கொண்டனர்.

62. ஜம்மு காஷ்மீரில் மாநிலத்தில் உள்ள எந்த மாவட்டத்திற்கு இராணுவம் சார்பில் சூரிய மின்சக்தி விளக்குகள் வழங்கப்பட்டன?

**விடை : தோடா**

**விளக்கம் :**

1. இம்மாவட்டத்தில் உள்ள மக்கள் போதிய மின்வசதி இன்றி பெரிதும் அவதிபடுவதால் அவர்களுக்கு உதவ இராணுவம் முடிவுவெடுத்தது.
2. இதன்படி முதற்கட்டமாக 5,000 வீடுகளுக்கு சூரியமின்சக்தி விளக்குகளை வழங்க இராணுவம் முடிவு செய்தது.
3. பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியோடு 17,000 குடிசை வீடுகளுக்கு சூரிய மின்சக்தி விளக்குகளை அளித்துள்ளது.

63. 2011-மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி சமஸ்கிருதம் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை : 24,821**

**விளக்கம் :**

1. இந்த எண்ணிக்கை 2001-மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 14,135 இருந்தது.

64. இரண்டாவது தேசிய சுற்றுலா ஒருங்கிணைப்பு மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை : ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்)**

**விளக்கம் :**

1. மாநில அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் "Protourism" என்ற திட்டம் முன்மொழியப்பட்டது. இந்த திட்டம் சுற்றுலாவை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

65. பூடானைச் சேர்ந்த ஊடக அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு திட்டத்திற்கான கூட்டம் (Capacity Development Programme) எங்கு நடைபெற்றது?

**விடை : நியூ டெல்லி**

**விளக்கம் :**

1. பூடான் தேர்தல் ஆணையத்தின் வேண்டுகோள் படி, இந்தியாவின் IIIDEM (India International Institute of Democracy and Election Management) ஜூலை 9 முதல் 13 வரை 5 நாட்கள் இக்கூட்டத்தை நடத்தியது.

2. இந்திய தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ரீ O.P. ராவத் இதனை துவங்கி வைத்தார்.
3. இக்கூட்டத்தில் தேர்தலில் ஊடகங்களின் பங்கு பற்றி ஆலோசிக்கப்பட்டது.

66. Startup India திட்டத்தை ஜூலை 16 முதல் துவங்கிய மாநிலம் எது?

**விடை : மத்திய பிரதேசம்**

**விளக்கம் :**

1. Startup India திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாகனம் மத்திய பிரதேசத்தின் தலைநகர் போபாலிலிருந்து 10 நகரங்களில் பயணிக்க உள்ளது.
2. இதன் மூலம் 30 நாட்களுக்குள் 15 நிறுவனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

67. ஆசியாவில் பசுமை இல்ல வாயுக்களின் பட்டியல் குறித்த 16-வது கூட்டம் (WGIA 16 – 16th Workshop on Greenhouse Gas Inventories in Asia) எங்கு நடைபெற்றது?

**விடை : நியூ டெல்லி**

**விளக்கம் :**

1. இதனை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் துவங்கி வைத்தார்.
2. இதில் அவர் பேசுகையில் வரும் 2022 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை 175 ஜிகா வாட் அளவிற்கு உற்பத்தி செய்ய உள்ளதாகக் கூறினார்.
3. மேலும், தற்போது பயன்படுத்தும் BS IV ரக எரிபொருளுக்குப் பதிலாக BS VI ரக எரிபொருளை வரும் 2020-க்குள் இந்தியா முழுமைக்கும் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

68. 2017, உலக வங்கியின் புள்ளிவிவரப்படி, பொருளாதாரத்தில் உலகளவில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை : 6**

**விளக்கம் :**

1. இதில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி & பிரிட்டன் ஆகியவை முறையே முதல், 2-ம், 3-ம். 4-ம் மற்றும் 5-ம் இடங்களைப் பெற்றுள்ளன.
2. இந்தியா $ 2.597 டிரில்லியன் GDP உடன் 6-ம் இடத்திலும், பிரான்ஸ் தியா $ 2.582 டிரில்லியன் GDP உடன் 7-ம் இடத்திலும் உள்ளன.

69. ரயில் பவனில் நடைபெற்ற அழகிய ரயில் நிலையங்கள் போட்டியில் **(Beautification Competition)** முதல் பரிசை வென்ற ரயில் நிலையம் எது?

**விடை : மத்திய ரயில்வேயின் பிலார்ஷா மற்றும் சந்திரபூர் ரயில் நிலையம்**

**விளக்கம் :**

1. 2-ம் பரிசை கிழக்கு ரயில்வேயின் மதுபானி ரயில் நிலையமும், தெற்கு ரயில்வேயின் மதுரை ரயில் நிலையமும் வென்றன.
2. இதே போல் மேற்கு ரயில்வேயின் காந்திதாம் ரயில் நிலையமும், மேற்கு மத்திய ரயில்வேயின் கோட்டா ரயில் நிலையமும், தெற்கு மத்திய ரயில்வேயின் செகந்திராபாத் ரயில் நிலையமும் 3-ம் பரிசினை வென்றன.
3. இப்பரிசுகளை மத்திய ரயில்வே மற்றும் நிலக்கரித் துறை அமைச்சர் பியூஸ் கோயல் வழங்கினார்.

70. அண்ணா உணவகம் (anna Canteen) எங்கு துவங்கப்பட்டுள்ளது?

**விடை : ஆந்திரா**

**விளக்கம் :**

1. இங்கு வழங்கப்படும் சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் இரவு உணவு ஆகிய அனைத்துமே ரூ.5 என்ற விலைக்கே வழங்கப்படுகிறது.
2. இது ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களால் விஜயவாடாவிலுள்ள பவனிபுரத்தில் துவங்கி வைக்கப்பட்டது.
3. இதே போல் அம்மாநிலம் முழவதும் 60 அண்ணா உணவகங்கள் துவங்கப்பட்டன.

71. "Tall Ship Races – 2018" போட்டியில் பங்கேற்க உள்ள இந்தியக் கப்பல் எது?

**விடை : INS தரங்கினி (INS Tarangini)**

**விளக்கம் :**

1. இப்போட்டி, இங்கிலாந்தின் சதர்லேண்ட்டில் (sunderland) நடைபெறவிருக்கிறது.
2. உலகம் முழுவதும் சுற்றுவதற்காக இந்தியாவால் அனுப்பப்பட்ட முதல் கப்பல் (2003 – 2004) இதுவாகும்.
3. இக்கப்பல் ஏற்கனவே 2007, 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற "Tall Ship Races" போட்டிகளில் பங்கேற்றுள்ளது.
4. தற்போது Lokayan – 18(travel around the world – 18) என்ற பெயரில் உலகை வலம் வந்துக் கொண்டுள்ளது.

72. "Swach Survekshan Grameen 2018" (SSG – 2018) என்ற திட்டத்தை துவங்கிய அமைப்பு எது?

**விடை : மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம்**

**விளக்கம் :**

1. இந்தத் திட்டத்தின் மூலம் ஆகஸ்ட் 1 முதல் 31 வரை நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்களையும் ஆய்வு செய்து சுகாதாரத்தின் அடிப்படையில் மாவட்டங்களின் தரவரிசைப் பட்டியல் கணக்கிடப்படும்.
2. இதில் உயர்நிலையிலுள்ள மாவட்டம் மற்றும் மாநிலங்களுக்கு அக்டோபர் 2 அன்று பரிசளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

73. தாய்மொழி மற்றும் மாநில கலாச்சாரத்தை பாதுகாக்க எந்த மாநில அரசு "பாரம்பரிய அமைச்சரவை" (Heritage Cabinet) ஒன்றை அமைத்துள்ளது?

**விடை : ஒடிசா**

**விளக்கம் :**

1. 8 பேரை உள்ளடக்கிய இக்குழுவின் தலைவர் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆவார்.
2. இக்குழு விரைவில், அதற்கான கொள்கைகள், குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டம் ஆகியவற்றை வகுக்க உள்ளது.

74. மாவட்ட நல்லெண்ண தூதராக (District and Ambassador) பெண்களை அமர்த்த, முடிவு செய்துள்ள மாநிலம் எது?

**விடை : மத்திய பிரதேசம்**

**விளக்கம் :**

1. இது பேட்டி பச்சோ – பேட்டி பதோ (BB – BP) திட்டத்தின் கீழ், ஏதேனும் ஒரு துறையில் சாதனை படைத்தப் பெண்களை, மாவட்ட நல்லெண்ண தூதராக அறிவிக்க உள்ளது.

75. Institute of cost Accountants of India அமைப்பின் பிளாட்டினம் ஜீபிளியை துவங்கி வைத்தவர் யார்?

**விடை : ஸ்ரீ ராம்நாத் கோவிந்த் (இந்திய குடியரசுத் தலைவர்)**

**விளக்கம் :**

1. ஜூலை 14 அன்று டெல்லியில் இவ்விழா நடைபெற்றது.

76. அண்மையில் பிரம்மோஸ் ஏவுகணை எப்போது சோதிக்கப்பட்டது?

**விடை : ஜூலை 16**

**விளக்கம் :**

1. இது ஒடிசா மாநிலம் பாலாசோரில் உள்ள ஏவுகணை தளத்திலிருந்து சோதித்து பார்க்கப்பட்டது.

2. இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் நதியின் பெயர்சூட்டப்பட்ட இந்த ஏவுகணை 3-டன் எடையும், 8.5 மீட்டர் நீளமும் கொண்டது.

3. இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டுத்தயாரிப்பான இந்த ஏவுகணை ஆரம்பத்தில் 290 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இது தற்போது 400 – 800 கிலோமீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.
4. போர் விமானங்களிலிருந்தும் இயக்க ஏதுவாக அதன் எடை 500 கிலோவாக குறைக்கப்பட்டுள்ளது.

77. லோக்பால் சட்டம் எப்போது இயற்றப்பட்டது?

**விடை : 2013**

**விளக்கம் :**

1. பிரதமர் உள்ளிட்ட மத்திய அரசை சார்ந்தவர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

2. லோக்பால் அமைப்புக்கான பரீசிலினை குழுவை கட்டமைப்பது குறித்து ஆலோசிக்க பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ரா, மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன், மக்களவையின் 2-வது பெரிய கட்சியை சார்ந்த மல்லிகார்ஜுன கார்கே, நீதித்துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னாள் அட்டார்னி ஜெனரல் முகுல் ரோஹித்கி ஆகியோர் கலந்து கொள்ள தகுதி பெற்றனர். இதில் மல்லிகார்ஜுன கார்கே மட்டும் கலந்துக் கொள்ளவில்லை.
3. பரிசீலனைக்குழு என்பது லோக்பால் அமைப்பின் தலைவர் யார், உறுப்பினர் யார் என்பதை பரிந்துரைக்கும்.

78. மகாத்மா காந்தியடிகளின் 150-வது பிறந்த தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை : அக்டோபர் 2, 2018**

**விளக்கம் :**

1. இதையொட்டி 60 ஆண்டுகள் கடந்த ஆண்கள், 55 ஆண்டுகளையும் கடந்து தனது சிறைத்தண்டனையில் பாதியை கழித்தவர்களை விடுதலை செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
2. இதேபோல தனது சிறைத்தண்டனை காலத்தில் பாதி காலத்தை கடந்த 70 சதவீதம் உடல் ஊனமுற்றவர்கள், தனது சிறைக்காலத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் கழித்த கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டோரையும் விடுதலை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

79. பிரதமர் நரேந்திர மோடி மிர்ஷாபூரிலுள்ள (உத்திரப் பிரதேசம்) எந்த கால்வாய் திட்டத்தை நாட்டிற்கு அர்பணித்தார்?

**விடை : Bansagar Canal Project**

**விளக்கம் :**

1. இதன் மூலம் உத்திரப் பிரதேசத்திலுள்ள மிர்ஷாபூர் மற்றும் அலகாபாத் மாவட்டங்கள் நல்ல பயனடையும்
2. மேலும் இவர் மிர்ஷாபூர் மருத்துவக் கல்லூரிக்கும் அடிக்கல் நாட்டினார்.
3. இதனைத் தொடர்ந்து, 100 ஜன் ஔஷதி கேந்திராக்களை (மலிவு விலை மருந்தகம்) அம்மாநிலத்தில் துவங்கி வைத்தார்.

4. பின், கங்கை நதியில் அமைந்திருக்கும் பால்கட் ஜீனார் (Balughat Chunar) பாலத்தையும் நாட்டிற்கு பிரதமர் அர்பணித்தார்.

80. 2-வது தேசிய சுற்றுலா கூட்டம் (2nd National Tourism Conclave) எங்கு நடைபெற உள்ளது?

**விடை : ராஜஸ்தான்**

**விளக்கம் :**

1. ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் அம்மாநில சுற்றுலாத் துறை உயர் அதிகாரிகளால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

81. AYUSH தேசிய நிறுவனங்களின் தலைவர்களின் மாநாட்டை துவங்கி வைத்தவர் யார்?

**விடை : பிரகாஷ் ஜவடேகர் (மத்திய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர்) & ஸ்ரீபாத் யசோ நாயக் (AYUSH மாநில அமைச்சர்)**

**விளக்கம் :**

1. ஜூலை 17 மற்றும் 18 ஆகிய இரண்டு நாட்கள் இந்த மாநாடு டெல்லியிலுள்ள இந்தியா சர்வதேச மையத்தில் (India International Centre) நடைபெற்றது.
2. இதில் IIT, DST, DBT, UGC போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் கலந்துக் கொண்டன.
3. மேலும், SAI (Sports Authority of India) மற்றும் IIT (Indian Institute of Techonology) ஆகியவை இணைந்து செயல்பட பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

82. "Empowering Women : Fostering Entrepreneurshi Innovation and Sustainability" என்ற தலைப்பிலான மாநாட்டை துவங்கி வைத்தவர் யார்?

**விடை : M. வெங்கய்யா நாயுடு (துணைக் குடியரசுத் தலைவர்)**

**விளக்கம் :**

1. இந்த மாநாட்டை நிதி ஆயோக் மற்றும் ஸ்ரீராம் வர்த்தகக் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்தின.

2. இதில் புதுச்சேரியின் துணை நிலை ஆளுநர் டாக்டர் கிரண் பேடி, டெல்லி பல்கலைக்கழக துணைவேந்தர் யோகேஷ் தியாகி, நிதி ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரி அமிதாப் காந்த் மற்றும் மற்ற பிரமுகர்கள் பங்கேற்றனர்.

83. பல்கலைக்கழக மானியக்குழுவுக்கு மாற்றாக கொண்டுவரப்பட உள்ள ஆணையம் எது?

**விடை : உயர்கல்வி ஆணையம்**

**விளக்கம் :**

1. இந்த உயர்கல்வி ஆணையத்தில் இரு பிரிவுகள் இருக்கும். அதில் ஒரு பிரிவானது கல்லாரி, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கும் பணிகளை மேற்கொள்ளும், மற்றொரு பிரிவு அவற்றின் நிர்வாக செயல்பாடுகளை கட்டுப்படுத்தும்.

84. மருத்துவர்களின் பரிந்துரைகள் இல்லாமல் நோய் எதிர்ப்பு மருந்துகளை மிக அதிகமாக பயன்படுத்துவதால் உருவாகும் நோய் தொற்று எது?

**விடை : செப்சிஸ்**

**விளக்கம் :**

1. இந்தியாவில் ஆண்டுக்கு 57,000 குழந்தைகள் இந்த நோய் தொற்றினால் உயிரிழப்பதாக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

85. எந்த ஆண்டிற்குள் 100 சதவீதம் எலக்ட்ரிக் வாகனங்களை விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

**விடை : 2030**

86. கிழக்குகாசிய நாடான ருவாண்டாவிற்கு பயணம் மேற்கொண்ட முதல் இந்திய பிரதமர் யார்?

**விடை : நரேந்திர மோடி**

**விளக்கம் :**

1. ருவாண்ட அதிபர் பால் ககாமேக்கும், பிரதமர் மோடிக்கும் இடையில் இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்துவது தொடர்பாக 8 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

2. மேலும், ருவாண்ட நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு இந்தியா சார்பில் ரூ.1377 கோடி கடன் உதவி வழங்கப்படும் என்றும் மோடி அறிவித்தார்.

87. "Swach Survekshan Grameen 2018" (SSG – 2018) என்ற திட்டம் மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தால் எந்த மூன்று மாநிலங்களில் தொடங்கப்பட்டுள்ளது?

**விடை : உத்திரபிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா**

**விளக்கம் :**

1. இந்தத் திட்டத்தின் மூலம் ஆகஸ்ட் 1 முதல் 31 வரை நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்களையும் ஆய்வு செய்து சுகாதாரத்தின் அடிப்படையில் மாவட்டங்களின் தரவரிசைப் பட்டியல் கணக்கிடப்படும்.
2. இதில் உயர்நிலையிலுள்ள மாவட்டம் மற்றும் மாநிலங்களுக்கு அக்டோபர் 2 அன்று பரிசளிக்கப்படும்.

88. எந்த மாநில அரசு ஊட்டச்சத்தின்மையை ஒழிக்க "போசான் அபியான்" திட்டத்தை தொடங்கியுள்ளது?

**விடை : குஜராத்**

**விளக்கம் :**

1. அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்து குறைப்பாட்டை ஒழிப்பதற்காக ஜூலை 4 அன்று குஜராத் மாநில அரசு மாநிலந்தழுவிய 'போசான் அபியான்" திட்டத்தை தொடங்கியது. 14 முதல் 18 வயதிற்குட்பட்ட சிறுமிகளுக்கிடையே நிலவும் ஊட்டச்சத்தின்மையை ஒழிப்பதற்காக 'பூர்ணா' என்ற திட்டத்தையும் அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.
2. 'PURNA' என்பது 'Prevention of Under Nutrition and Reduction of Nutritional Anemia'. நாடு தழுவிய தேசிய ஊட்டச்சத்து இயக்கமானது (பேசான் அபியான்) 2018 மார்ச் 8 அன்று ராஜஸ்தானில் ஜூன்ஜூனுவிலிருந்து பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.

89. எந்த நதியின் தூய்மைப்படுத்தும் திட்டத்தை கண்காணிக்க தேசிய பசுமை தீர்ப்பாயம், குழு ஒன்றை அமைத்துள்ளது?

**விடை : யமுனை**

**விளக்கம் :**

1. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவரான ஏ.கே. கோயல் தலைமையிலான அமர்வு அந்த கண்காணிப்பு குழுவின் உறுப்பினராக பி.எஸ் சஜ்வான் (தீர்ப்பாயத்தின் ஓய்வு பெற்ற உறுப்பினர்), ஷைலஜா சந்திரா (தில்லி முன்னாள் தலைமை செயலர்) ஆகியோரை நியமித்தது.

90. மேற்குவங்க மாநிலத்தின் பெயரை எவ்வாறு மாற்றுவதற்கான தீர்மானத்தை அம்மாநில சட்டப்பேரவை நிறைவேற்றியுள்ளது?

**விடை : பங்களா**

**விளக்கம் :**

1. வங்காளம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மாநிலத்தின் பெயர் பங்களா என்றே இருக்கும் என்று அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

91. கிராமப்புற பெண்களை சமூக பங்கேற்பு மூலம் வளர்ச்சி அடையச் செய்ய இந்திய அரசால் அண்மையில் உருவாக்கப்பட்ட திட்டம் எது?

**விடை : மகிலா சக்தி கேந்திரா (Mahila Shakti Kendra)**

**விளக்கம் :**

1. இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசும், மாநில அரசும் 60 : 40 என்ற விகித்திலும், மத்திய அரசுடன் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறப்பு அந்தஸ்து பெற்ற மாநிலங்களும் 90 : 10 என்ற விகிதத்திலும் செலவுகளை பகிர்ந்துக் கொள்ளும்.

92. யார் தலைமையிலான குழு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மாற்றி அமைக்க பரிந்துரைத்துள்ளது?

**விடை : நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா**

**விளக்கம் :**

1. மின்னணு தகவல் பாதுகாப்பு குறித்து விரிவான அறிக்கை அளிப்பதற்காக கடந்த ஆண்டு ஜூலை மாதம் நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா தலைமையில் 10 பேர் அடங்கிய உயர்நிலைக் குழுவை மத்திய அரசு நியமித்தது.

93. உலகிலேயே பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?

**விடை : இந்தியா**

**விளக்கம் :**

1. கடந்த நிதியாண்டில் இந்தியாவின் பால் உற்பத்தி 176.35 மில்லியன் டன்னாக அதிகரித்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

94. இந்தியாவுக்கு 22 சீ கார்டியன் ரக ஆளில்லா விமானங்களை 2 பில்லியன் டாலர்களுக்கு விற்பனை செய்ய ஒப்பந்தம் செய்துள்ள நாடு எது?

**விடை : அமெரிக்கா**

**விளக்கம் :**

1. இதுபோல் நேட்டோ நாடுகள் அல்லாத பிறநாடு ஒன்றுக்கு இவ்வகை விமானங்களை அமெரிக்கா விற்பது இதுவே முதல் முறையாகும்.
2. இதேபோல் ரஷ்யாவிடம் இருந்து எஸ்.400 டிரையம்ப் ரக வான்பாதுகாப்பு ஏவுகணைகள் சாதனத்தை இந்தியா ரூ.40,000 கோடி செலவில் வாங்க திட்டமிட்டுள்ளது.

95. நாட்டின் முதல் புல்லட் ரயில் எந்தெந்த ஊர்களுக்கிடையே இயக்கப்பட உள்ளது?

**விடை : அகமதாபாத் - மும்பை**

**விளக்கம் :**

1. குஜராத் மாநிலம், அகமதாபாத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலம் மும்பை இடையே வரும் 2023 ஆம் ஆண்டு முதல் புல்லட் ரயிலை இயக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

# உலக நிகழ்வுகள்

1. யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழு மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை : மனமா (பஹ்ரைன் நாட்டின் தலைநகர்)**

**விளக்கம் :**

1. இம்மாநாட்டில் ஜப்பானிலுள்ள 12 கிறித்துவ தேவலாயங்கள் மற்றும் தென்கொரியாவின் மலைப்பகுதியில் அமைந்துள்ள 7 புத்த கோயில்களை யுனெஸ்கோ நிறுவனம் பாரம்பரிய சின்னமாக அங்கீகரித்துள்ளது.
2. பஹ்ரைன் நாட்டு
   - மன்னர் - ஹமாத் பின் இசு அல் கலீஃபா
   - நாணயம் - தினர்

2. எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் “Michigan Micro Mote” என்ற உலகின் மிகச்சிறிய கணினியை உருவாக்கியுள்ளனர்.

**விடை : அமெரிக்கா**

**விளக்கம் :**

1. அமெரிக்காவின் மிக்சிகான் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட இக்கணினியின் அளவு 0.3 × 0.3 மில்லி மீட்டர் ஆகும்.
2. புற்றுநோய் பாதிப்பு குறித்து ஆராய்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம்.

3. AMCDRR 2018 எங்கு நடைபெற உள்ளது?

**விடை : உலான்பாடர், மங்கோலியா**

**விளக்கம் :**

1. AMCDRR – Asian Ministerial Conference on Disaster Risk Reduction
2. பேரிடர்களின் போது ஏற்படும் பிரச்சனைகளைக் குறித்து ஆலோசிப்பதற்கான இக்கூட்டம் ஜூலை 3 முதல் 6 வரை நடைபெற உள்ளது.
3. இதில் உள்துறை மந்தியான ஸ்ரீ கிரன் ரிஜிஜீ தலைமையிலான குழு இந்தியா சார்பாக பங்கேற்க உள்ளது.
4. AMCDRR 2018 –ன் கருத்து Preventing Disaster Risk : Protecting Sustainable Development

4. ஐக்கிய அரவு அமீரகத்தைச் (UAE) சேர்ந்த “நேஷனல் அட்வைஸர் பியூரோ” நிறுவனம் எங்கிருந்து பனிப்பாறைகளை இழுத்து வர திட்டமிட்டுள்ளது?

**விடை : அண்டார்டிகா**

**விளக்கம் :**

1. குடிநீர் தேவையை சமாளிப்பதற்காகவே, UAE இந்த திட்டத்தை மேற்கொண்டுள்ளது.
2. சுமார் 9,000 கி.மீ தொலைவிலிருந்து பனிப்பாறைகளை இழுத்து வருவதற்கான திட்டத்தை வரும் 2020-க்குள் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. மெக்ஸிகோ அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றவர் யார்?

**விடை : ஆண்ட்ரஸ் மனுவெல் ஒப்ராடோர் (64)**

**விளக்கம் :**

1. வட அமெரிக்க நாடான மெக்ஸிகோவில் ஜூலை 1 அன்று அதிபர் தேர்தல் நடைபெற்றது.
2. அதில் இடது சாரிக் கட்சியான தேசிய மறுவளர்ச்சி கட்சியின் தலைவர் ஒப்ராடோர் 53% வாக்குகளைப் பெற்று அடுத்த அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
3. மெக்ஸிகோவின் நவீன கால வரலாற்றில், 50%-க்கும் மேலான வாக்குகளை ஒருவர் பெற்றுள்ளது இதுவே முதல் முறையாகும்.
4. முன்னாள் மெக்ஸிகோ அதிபர் - என்ட்ரிகோ பெனாநியேடோ
5. தலைநகரம் : மெக்ஸிகோ சிட்டி
6. நாணயம் : மெக்சிகன் பெசோ

6. சுற்றுலா சென்ற 12 சிறுவர்கள் மற்றும் அவர்களது கால்பந்து பயிற்சியாளர் உட்பட 13 பேரும் குகைக்குள் சிக்கிய சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?

**விடை : தாய்லாந்து**

**விளக்கம் :**

1. ஜூன் 23-ஆம் தேதி தாய்லாந்தின் சியாங் ராய் என்ற பகுதிக்கு 12 சிறுவர்களுடன் கால்பந்து பயிற்சியாளர் ஒருவர் சுற்றுலாவிற்கு சென்றார்.
2. அப்பகுதியிலுள்ள ஒரு குகையை பார்வையிட அனைவரும் குகைக்குள் சென்றனர். அப்போது பெய்த கன மழையால் குகையில் வெள்ளம் புகுந்தது.
3. இதனால் 10 நாட்களுக்கு மேலாக அவர்கள் 13 பேரும் குகையில் சிக்கியுள்ளனர்.
4. குகையில் வெள்ளம் வடியும் வரை, அவர்களை மீட்க முடியாத நிலையில் அவர்களுக்கு தேவையான உணவு, மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தாய்லாந்து அரசினால் அனுப்பப்பட்டு வருகிறது.

7. அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதி பதவியில் அமர வாய்ப்புள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல நீதிபதி யார்?

**விடை: அமுல் தாபர்**

**விளக்கம்:**

1. அமெரிக்க உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆன்டனி கென்னடியின் பதவிக் காலம் முடிவடைவதைத் தொடர்ந்து, புதிய தலைமை நீதிபதியின் பெயரை ஜூலை 9-ஆம் தேதி பரிந்துரைக்கவிருப்பதாக அதிபர் டிரம்ப் அறிவித்திருந்தார்.
2. இந்நிலையில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீதிபதி அமுல் தாபர் உள்ளிட்ட 4 பேரை இறுதியாகத் தேர்வு செய்து, அவர்களிடம் டிரம்ப் நேர்காணல் நடத்தி வருகிறார்.

8. வெளிநாடுகளைச் சார்ந்த அறிவியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு பிரிட்டனால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய விசா எது?

**விடை: டயர் 5**

**விளக்கம்:**

1. இதன்படி தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பிரிட்டனில் இருக்கலாம். பின்னர் அந்த காலத்தை நீட்டிக்கலாம்.
2. இதற்கு முன் டயர் 1 விசா நடைமுறையிலிருந்தது.

9. பாகிஸ்தானுக்காக 2 செயற்கைக் கோள்களை வர்த்தக ரீதியாக ஏவிய நாடு எது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

1. கடந்த 19 ஆண்டுகளில் சர்வதேச செயற்கைக்கோள்களை சீன ராக்கெட்டுகள் வர்த்க ரீதியில் சுமந்து சென்று விண்ணில் செலுத்துவது இதுவே முதல்முறை.
2. சீனாவில் அமைந்துள்ள ஜிவ்குவான் ஏவுதளத்திலிருந்து **மார்ச்-2சி ராக்கெட் மூலம் பிரஸ்-1 மற்றும் பாக்டெஸ்-1ஏ** செயற்கைக்கோள்களை சீனா ஏவியது.
3. இதில் பிரஸ்-1 என்பது பாகிஸ்தானுக்காக சீனா வடிவமைத்த முதல் ‘ஆப்டிகல்’ வகை தொலை உணர்வு செயற்கைக்கோள் ஆகும்.

4. பாக்டெஸ்-1ஏ பாகிஸ்தானிலேயே உருவாக்கப்பட்ட செயற்கைகோள் ஆகும்.

10. உலகின் மிகப்பெரிய செல்லிடப்பேசி தயாரிப்பு நிறுவனத்தை இந்திய பிரதமர் எந்த நாட்டு அதிபருடன் இணைந்து திறந்து வைத்தார்?

**விடை: தென்கொரியா**

**விளக்கம்:**

1. இந்நிறுவனம் டெல்லியை அடுத்துள்ள நொய்டாவில் அமைந்துள்ளது. செல்லிடப்பேசி தயாரிப்பில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
2. இந்நிறுவனத்தை தென்கொரியாவை சார்ந்த சாம்சங் நிறுவனம் அமைத்துள்ளது.
3. இந்தியா வந்துள்ள தென்கொரியா அதிபர் மூன் ஜேன்-இன் டெல்லியில் உள்ள காந்தி அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ள உலக அமைதிக்கான மணியை ஒலிக்க செய்தார்.

11. நாடாளுமன்ற அளவிலான பேச்சுவார்த்தையை ஊக்குவிக்கும் வகையில் இந்தியா எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை: ருவாண்டா**

**விளக்கம்:**

1. மாநிலங்களவை தலைவர் வெங்கைய்யா நாயுடுவுக்கும், ருவாண்டா நாடாளுமன்ற மேலவையின் தலைவர் பெர்னாட் மகுஸாவுக்கும் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

12. இந்தியா 2030 ஆண்டுக்குள் எந்த நாட்டுடனான வர்த்தகத்தை 5 ஆயிரம் கோடி டாலராக உயர்த்த ஒப்பந்தமிட்டுள்ளது?

**விடை: தென்கொரியா**

13. அமெரிக்க வெளியுறவுத்துறையின் நிகழாண்டுக்கான ஆட்கடத்தல் அறிக்கையில், ‘ஆட்கடத்தலில் மோசமான நிலையில் உள்ள நாடு’ என குறிக்கப்பட்டுள்ள நாடு எது?

**விடை: வடகொரியா**

**விளக்கம்:**

1. கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை கூட வடகொரியா பெறவில்லை என்றும், ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றும், வடகொரியாவில் உள்ள சிறைகளிலுலம், பயிற்சி பட்டறைகளிலும் கட்டாய உழைப்பு பெறப்படுவது தொடர்கதையாக உள்ளது என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14. அண்மையில் கொலம்பியாவின் எந்த தேசியப்பூங்காவை UNESCO, உலக பாரம்பரிய தளமாக அறிவித்தது?

**விடை: Chiribiquete தேசியப்பூஞ்கா**

**விளக்கம்:**

1. ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பானது (UNESCO) இதனை அறிவித்துள்ளது.
2. இப்பூங்கா அந்நாட்டின் மிகப்பெரிய பூங்கா ஆகும். அமேசானின் அதிக தாவர வகைகளை உடைய இடங்களுள் இதுவும் ஒன்றாக உள்ளது.
3. 1989-ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த பூங்கா நிறுவப்பட்டது.

15. நேட்டோ (NATO)-வின் வருடாந்திர கூட்டம் இந்த ஆண்டு எங்கு நடைபெற்றது?

**விடை: பிரஸ்ஸெஸ் (பெல்ஜியம் தலைநகரம்)**

**விளக்கம்:**

1. நேட்டோ என்பது வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகும். இந்த அமைப்பு 1949-ல் உருவாக்கப்பட்டது.
2. நேட்டோவின் தலைமையம் - பிரஸ்ஸெஸ்
3. நேட்டோவின் பொதுச்செயல் - ஜென்ஸ் ஸ்டோல்டென்பர்க்
4. பிரதமர் - சார்லஸ் மிட்சர்
5. நாணயம் - யூரோ
6. தங்களது GDP (மொத்த உள்நாட்டு உற்பத்தி)-ல் 2 சதவீதத்தை நேட்டோ அமைப்பின் பாதுகாப்பிற்காக 2024 முதல் ஒதுக்கீடு செய்வதற்கு ஐரோப்பிய நாடுகள் சம்மதித்துள்ளது.

16. அமெரிக்காவின் சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ள இந்திய வம்சாவளி பெண்கள் யார்?

**விடை: 1) ஜெயஸ்ரீ உல்லல்**

**2) நீரா சேத்தி**

1. தொழில்மூலம் அதிக வருவாய் ஈட்டியவர்களின் பட்டியலை அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டது.
2. இப்பட்டியலில் ஜெயஸ்ரீ உல்லல் 18-வது இடத்தையும், நீராசேத்தி 21-வது இடத்தையும் பிடித்தனர்.
3. தலைநகரம் - வாஷிங்டன்
4. அதிபர் - டொனால்டு டிரம்ப்
5. நாணயம் - டாலர்

17. போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்க எந்த நாட்டு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது?

**விடை: இலங்கை**

**விளக்கம்:**

1. கைதிகள் சிறையிலிருந்து இருந்துக்கொண்டே போதைப்பொருட்கள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளதால் இலங்கை அமைச்சரவை இச்சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

18. BIMSTEC நாடுகளின் உச்சி மாநாடு எங்கு நடைபெற உள்ளது?

**விடை: காத்மண்ட் (நேபாளம்)**

**விளக்கம்:**

1. தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான இம்மாநாடு ஆகஸ்டு 31-ல் தொடங்கி இரண்டு நாட்கள் நேபாளத்தில் நடைபெற உள்ளது.
2. தலைநகர் - காத்மண்ட்
3. நாணயம் - நேபாள ரூபாய்
4. அதிபர் - வித்யா தேவி பண்டாரி
5. பிரதமர் - காட்கா பிரசாத் ஒலி

19. பிரிக்ஸ் கல்வி அமைச்சர்களின் 6வது கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை: கேப்டவுன் (தென் ஆப்பிரிக்கா)**

**விளக்கம்:**

1. இம்மாநாட்டில் கலந்துக் கொண்ட இந்தியா ‘டிஜிட்டல் என்ஜினியரிங்’ குறித்து விவாதித்தது.
2. பிரிக்ஸ் என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகும்.
3. தலைநகரம்
    - பிரிட்டோரியா (நிர்வாகம் சார்ந்த) (Executive)
    - புளும்ஃபோண்டெய்ன் (நீதித்துறை சார்ந்த (Judicial)
    - கேப்டவுன் (சட்டமன்றம் சார்ந்த) (Legislative)
4. அதிபர் - சிரில் ராமபோசா
5. நாணயம் - ரேண்ட்

20. இந்தியா எந்த நாட்டுடன் தொழில்நுட்ப பரிமாற்ற மையத்தை அமைத்துள்ளது?

**விடை: கொரியா**

**விளக்கம்:**

1. TEC – Technology Exchange Centre
2. புது டெல்லியில், கொரியா குடியரசின் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சர் ஹாங் ஜாங் ஹாக் மற்றும் இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவன அமைச்சர் கிரிராஜ் சிங் ஆகியோர் இணைந்து இந்த TEC மையத்தை துவங்கி வைத்தனர்.

21. BRICS கல்வி அமைச்சர்களுக்கான 6-வது கூட்டத்தின் கருத்து என்ன?

**விடை: “Digitization in Education”**

**விளக்கம்:**

1. இக்கூட்டம் தென் ஆப்பிரிக்காவின் கேப் டௌன் (Cap Town) நகரில் நடைபெற்றது.
2. இதில் இந்திய, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர், டாக்டர் சத்ய பால் சிங் பங்கேற்றார்.
3. தலைநகரம்
    - பிரிட்டோரியா (நிர்வாகம் சார்ந்த) (Executive)
    - புளும்ஃபோண்டெய்ன் (நீதித்துறை சார்ந்த (Judicial)

➢ கேப்டவுன் (சட்டமன்றம் சார்ந்த) (Legislative)

4. அதிபர் - சிரில் ராமபோசா
5. நாணயம் - ரேண்ட

22. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் பயங்கரவாத தடுப்பு இராணுவ பயிற்சி எங்கு நடைபெற உள்ளது?

**விடை: சிலியாபின்ஸ்க் நகர் (ரஷ்யா)**

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் பாகிஸ்தான் இராணுவம் பங்கேற்கும் இப்பயிற்சி ஆகஸ்டு 20 முதல் 29 வரை நடைபெறுகிறது.
2. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இடம்பெற்றுள்ள மற்ற நாடுகளான ரஷ்யா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாட்டு இராணுவங்களும் பங்கேற்கின்றனர்.
3. இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து இராணுவ பயிற்சியில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும். ஐ.நா. அமைதி படையில் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.
4. ரஷ்யாவின் தலைநகர் - மாஸ்கோ
5. அதிபர் - விளாடிமிர் புதின்
6. பிரதமர் - திமித்ரி மெட்வெடெவ்
7. நாணயம் - ரஷ்ய ரூபிள்

23. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு எது?

**விடை: ஐஸ்லாந்து**

**விளக்கம்:**

1. இஸ்ரேலுக்கு ஆதரவாக ஐ.நா மனித உரிமை ஆணையம் செயல்படுவதாக கூறி அமெரிக்கா இதிலிருந்து வெளியேறியது.
2. இந்த இடத்திற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 172 ஓட்டுகள் பெற்று ஐஸ்லாந்து ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராக தன்னை இணைத்து கொண்டது.
3. ஜனாதிபதி – குயொனி தி.ஜோகன்நெஸ்சன்
4. பிரதமர் - கத்ரின் ஜாகோப்சோடிர்
5. தலைநகரம் - ரிகியவிக்

6. நாணயம் - குரோனா

24. IGE (Intergovernmental Group of Experts) –ன் 3வது கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை: ஜெனீவா**

**விளக்கம்:**

1. 2 நாட்கள் நடைபெற்ற இக்கூட்டத்தை ஸ்ரீ ராம் விலாஸ் பஸ்வான் (நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர்) துவங்கி வைத்தார்.
2. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த இம்மாநாடு ஜூலை 10, 2018 அன்று நிறைவடைந்தது.

25. எந்த நாட்டில் அண்மையில் நெருக்கடிநிலை முடிவுக்கு வந்தது?

**விடை: துருக்கி**

**விளக்கம்:**

1. கடந்த 2016ல் நடைபெற்ற ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு பிறகு அமல்படுத்தப்பட்ட 2 ஆண்டுகால நெருக்கடி நிலை ஜூலை 19, 2018-ல் முடிவுக்கு வந்தது.
2. தறைகரம் - அங்காரா
3. அதிபர் - ரெசெப் தயிப் எர்டோகன்
4. நாணயம் - லிரா

26. 8வது இந்தியா ஓமன் கூட்டு ஆணைய மாநாடு (JCM – Joint Commission Meeting) எங்கு துவங்கியது?

**விடை: மஸ்கட்**

**விளக்கம்:**

1. இந்தியாவின் வர்த்தக மற்றும் தொழில்துறை மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் சுரேஷ் பிரபுவும், ஓமன் நாட்டின் தொழில், முதலீட்டு, வர்த்தக மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் டாக்டர் அலி பின் மசூத் அல் சுன்னத்தி ஆகிய இருவரும் இணைந்து தலைமை தாங்கினர்.

2. இதில் சுரேஷ் பிரபு பேசுகையில், இந்திய திட்டங்களான Make in India, Invest India ஆகியவை இந்தியாவில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் இதனை ஓமன் நாட்டு நிறுவனங்கள் பயன்படுத்த பலனடையுமாறுக் கூறினார்.

27. ASEAN நாடுகளின் கல்வித்துறை அமைச்சர்கள் மாநாட்டை எந்த நாடு நடத்த உள்ளது?

**விடை: மியான்மர்**

**விளக்கம்:**

1. மியான்மர் இம்மாநாட்டை இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கல்வித்துறையின் ஒத்துழைப்போடு 2018 அக்டோபரில் நடத்த உள்ளது.
2. ASEAN – Association of Southeast Asian Nations
3. ஆசியான் அமைப்பில் இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா, நியூசிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உறுப்பினரால் உள்ளன.
4. முதல் ஆசியான் நாடுகளின் கல்வித்துறை அமைச்சர் மாநாடு (ASED) 2006-ல் சிங்கப்பூரில் நடைபெற்றது. இம்மாநாடு 2017-ல் மலேசியாவில் நடைபெற்றது.
5. தலைநகரம் - நய்பிடா
6. நாணயம் - பர்மிஸ் கயட்
7. அதிபர் - வின் மீயண்ட்

28. உலக பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு (International Conference of Female Parliamentarians) எங்கு நடைபெற உள்ளது?

**விடை: டப்லின் கோட்டை (அயர்லாந்து)**

**விளக்கம்:**

1. Irish Women’s Parliamentary Caucus (IWPC) என்ற அமைப்பால் செப்டம்பர் 9-10 ஆகிய தினங்களில் இம்மாநாடு நடைபெற உள்ளது.

29. Pitch Black – 18 என்ற பயிற்சியை இந்திய விமானப்படை எந்த நாட்டுடன் மேற்க்கொள்ள உள்ளது?

**விடை: ஆஸ்திரேலியா**

**விளக்கம்:**

1. முதன் முறையாக இந்தயி விமானப்படை இப்பயிற்சியில் ஈடுபட உள்ளது. இதில் நான்கு Su-30 MKI, 01 X C-130 மற்றும் 01 X C-17 என்ற விமானத்துடன் இந்திய விமானப்படை இப்பயிற்சியில் ஈடுபட உள்ளது.
2. தலைநகரம் - கேன்பெரா (Canberra)
3. பிரதமர் - மால்கம் டர்ன்புல்
4. நாணயம் - டாலர்

30. எந்த நாட்டில் உலகின் முதலாவது அனைத்து மின்னணு கலை அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?

**விடை: ஜப்பான்**

**விளக்கம்:**

1. ஜப்பானின் டோக்கியோவிலுள்ள MORI கட்டிடத்தில் உலகின் முதல் மின்னணு கலை அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது. இயக்க உணர்வி மூலம் தூண்டப்பட்ட அடிக்கடி வண்ண வடிவ மாறுதலுடைய சுமார் 50 நிறுவல்கள், 100,000 சதுர அடி கொண்ட மேற்பரப்பில் விளக்குகள் உதவியுடன் பொருட்களை காட்சிப்படுத்தும், இந்த அருங்காட்சியகம் பார்ப்பதற்கு விளக்குகள் ஏதுமற்ற கருப்பு சுவர்களைக் கொண்ட அரங்கங்களின் தொகுப்பு போன்று உள்ளது.

31. ஹம்பத்தோட்டாவில் அமைந்துள்ள நஷ்டத்தில் இயங்கிவரும் இலங்கையின் மத்தல ராஜபக்ச பன்னாட்டு வானூர்தி நிலையத்தை இயக்கவுள்ள நாடு எது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. ஹம்பத்தோட்டாவில் உள்ள நஷ்டத்தை ஏற்படுத்தும் இலங்கையின் மத்தல ராஜபக்ச பன்னாட்டு வானூர்தி நிலையத்தை இந்தியா - இலங்கை கூட்டு முயற்சியாக இயக்கவுள்ளன. இவ்வானூர்தி நிலையம், வானூர்திகள் ஏதும் வருகைபுரியாத காரணத்தால் “உலகின் காலியான வானூர்தி நிலையம்” என அழைக்கப்படுகிறது.
2. இலங்கையின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்சேவின் பெயரில் அழைக்கப்படம் மத்தல வானூர்தி நிலையம், 2013 மாச்சில் அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது.

32. தனது நாட்டின் கரன்ஸியிலிருந்து ஐந்து பூஜ்யங்களை நீக்க முடிவு செய்துள்ள நாடு எது?

**விடை: வெனிசூலா**

**விளக்கம்:**

1. வெனிசூலாவில் தற்போது பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இதையடுத்து சர்வதேச நிதியம், நடப்பு ஆண்டில் மட்டும் வெனிசூலாவில் பணவீக்கம் 10 லட்சம் சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுத்தது.

33. முஸ்லீம் நாடான பாகிஸ்தானில் முதல் ஹிந்து எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?

**விடை: மகேஷ் குமார் மலானி (55)**

**விளக்கம்:**

1. பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த இவர் தார்பார்கள் என்ற தொகுதியில் போட்டியிட்டு 37,245 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

34. உலகின் மிக வயதான நபர் சியோ மியாகோ-வின் வயது என்ன?

**விடை: 117**

**விளக்கம்:**

1. 1901-ஆம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதி பிறந்த இவர் ஜப்பான் நாட்டை சார்ந்தவர். தெற்கு ஜப்பானை சேர்ந்த நபிதஜிமா தனதுத 117-வது வயதில் கடந்த ஏப்ரல் மாதம் மறைந்ததை தொடர்ந்து உலகின் மிக வயதான நபர் என்ற பட்டம் மியாகோவுக்கு வழங்கப்பட்டது.

35. இந்தியர்கள் இனி விமானநிலைய பயணவழி விசா (ஏடிவி) வைத்திருக்க தேவையில்லை என்று அறிவித்துள்ள நாடு எது?

**விடை: பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் அலெக்ஸாண்ட்ரே ஜிக்லர். இவர் ஜூலை 23 2018 முதல் பிரான்ஸில் உள்ள சர்வதேச விமானநிலையங்களை கடந்து வெளிநாடு செல்லும் பட்சத்தில்

இந்தியர்கள் ஏடிவி வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினார்.

36. அமெரிக்காவில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் தேசியக் குழுவுக்கு, தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் யார்?

**விடை: சீமா நந்தா**

**விளக்கம்:**

1. இதற்கு முன்பு சீமா, நீதித்துறையின் மனித உரிமைகள் பிரிவில் பணியாற்றி வந்தார்.
2. அமெரிக்காவில் குடியரசுசக் கட்சிக்கோ அல்லது ஜனநாயகக் கட்சிக்கோ தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்படும் முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் சீமா நந்தா என்பது குறிப்பிடத்தக்கது.

37. 17வது உலக சமஸ்கிருத மாநாடு (World Sanskrit Conference) எங்கு நடைபெற்றது?

**விடை: வான்கோவர், கனடா**

**விளக்கம்:**

1. ஜூலை 9 முதல் 13 வரை நடைபெற்ற இம்மாநாட்டை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜவடேகர் துவங்கி வைத்தர்.
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மாநாடு இந்தியாவில் இதுவரை மூன்று முறை நடந்துள்ளது.

# முக்கிய தினங்கள்

1. தேசிய மருத்துவர்கள் தினம் (National Doctors Day) என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை: ஜூலை 1**

**விளக்கம்:**

1. இந்த தினம் 1961-ல் பாரத ரத்னா விருது பெற்ற டாக்டர் புத்தன் சந்தர ராய் அவர்களுக்கு மரியாதை அளிக்கும் விதமாக ஆண்டுதோறும் இந்த தினம் ஜுலை 1 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

2. State Bank of India (SBI Day) தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜுலை 1**

**விளக்கம்:**

1. 1955 ஜுலை 1-ல் இம்பிரியல் வங்கி என்ற பெயரை பாராளுமன்ற சட்டத்தின்படி State Bank of India என்ற பொதுத்துறை வங்கியாக மாற்றப்பட்டதன் நினைவாக இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

3. சரக்கு மற்றும் சேவை வரிகள் தினம் (புளுவு னுயல) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜுலை 1**

**விளக்கம்:**

1. GST அறிமுகப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி இந்த தினம் கொண்டாடப்படுகிறது.
2. நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரிவிதிக்கும் GST முறை கடந்த ஆண்டு ஜுலை 1 முதல் நாடு முழுவதும் அப்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப்முகர்ஜி மற்றும் பாரத பிரதமரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் 70 ஆண்டுகளாக இருந்து வந்த பல்வேறு விதமான ரத்து செய்யப்பட்டது.

4. உலக கடல்பறவைகள் தினம் (World Seabird Day) எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜுலை 3**

**விளக்கம்:**

1. கடல் பறவைகளின் அழிவை தடுத்து அவைகளுக்குப் பாதுகாப்பு அளித்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

5. பன்னாட்டு கூட்டுறவு தினம் (International Cooperative Day) எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜூலை 7**

**விளக்கம்:**

1. கருத்து: Sustainable consumption and production of goods and services
2. இது 1995-லிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கடைபிடிக்கப்படுகிறது.

6. உலக மக்கள் தொகை தினம் (World Population Day) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜூலை 11**

**விளக்கம்:**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme) : "Family planning is a human right" (குடும்ப கட்டுப்பாடு என்பது மனித உரிமை).
2. இந்த தினம் 1989 முதல் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டம் (United Nations Development Programme (UNDP))-ன் கீழ் கொண்டாடப்பட்டு வருகிறது.

7. மலாலா தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: ஜூலை 12**

8. 19-வது கார்கில் தினம் என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை: ஜூலை 26**

**விளக்கம்:**

1. 1999 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீரில் உள்ள கார்கில் என்ற இடத்தில நடைபெற்ற போரில் இந்தியா பாகிஸ்தானை வெற்றிக் கொண்டது. இதில் உயிரிழந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26 அன்று இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

# விருதுகள்

1. காளிதாஸ் விருது பெற்றவர் யார்?

**விடை: அஞ்சலி இள மேனன் (78)**

**விளக்கம்:**

1. பல அர்த்தமுள்ள ஓவியங்கள் மூலம் பெண்களின் அடையாளம் பற்றிய உணர்ச்சிபூர்வமான அவரது சித்தரிப்புக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் இவ்விருது அஞ்சலி இள மேனனுக்கு வழங்கப்பட்டது.
2. இதேபோல், A. இராமசந்திரன் என்பவருக்கும் காளதாசர் விருது வழங்கப்பட்டது.

2. ஐசிசி ஹால் ஆப் ∴பேமில் (ICC Hall of Fame) இணைக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை: ராகுல் திராவிட்**

**விளக்கம்:**

1. இதேபோல், ஆஸ்திரேலியாவின் முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் பெயரும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.
2. இதில் இந்தியாவைச் சேர்ந்த பிஷன் சிங் பேடி, சுனில் கவாஸ்கர், கபில் தேவ், அணில் கும்ப்ளே ஆகியோரைத் தொடர்ந்து தற்போது 5-வது வீரராக திராவிட் சேர்க்கப்பட்டுள்ளார்.

3. 52-வது SKOCH உச்சி மாநாட்டில் நிகழாண்டுக்கான ஆண்டின் ‘‘சிறந்த முதலமைச்சர் விருது’’ பெற்ற மாநில முதல்வர் யார்?

**விடை: வசுந்தரா ராஜே**

**விளக்கம்:**

1. ராஜஸ்தான் மாநில முதல்வாரன இவர் மின்னணு ஆளுகையில் (e-governance) குறிப்பிட தக்க பணியாற்றியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

4. நிகழாண்டுக்கான இந்திய பொலிவுறு நகரங்கள் விருதுகளின் கீழ் திட்டங்களை அமல்படுத்துவதில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியமைக்காக ‘நகர விருது’ (City Awards)-க்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பொலிவுறு நகரம் எது?

**விடை: சூரத்**

**விளக்கம்:**

1. புதுடெல்லி உள்ளிட்ட ஒன்பது பொலிவுறு நகரங்கள் புதுமையான மற்றும் வெற்றிகரமான திட்டங்களை செல்படுத்தியமைக்காக “திட்டம்” (Project) விருதுகளைப் பெற்றுள்ளன.
2. ‘Smart Classrooms’ திட்டத்தை அமல்படுத்தியமைக்காக புதுடெல்லி மற்றும் ஜபல்பூர் (மத்தியப் பிரதேசம்) ஆகிய நகரங்களுக்கு சமூக நோக்கங்கள் பிரிவின் கீழ் விருது வழங்கப்பட்டன.
3. ‘Smart Campus’ திட்டத்திற்காக விசாகப்பட்டினத்திற்கும், ‘கலங்கரை விளக்கம்’ திட்டத்திற்காக பூனோவுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

5. நிகழாண்டின் யோகாசன மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு சிறப்பாக பங்களித்தமைக்காக எந்த மாநிலத்தை சேர்ந்த யோகா பயிற்சி நிறுவனத்திற்கு “பிரதமர் விருது” வழங்கப்படுகிறது?

**விடை: மும்பை**

**விளக்கம்:**

1. 2018ம் ஆண்டின் யோகாசன மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக சிறப்பான பங்களிப்பை அளித்தமைக்காக தனிநபர் பிரிவு விருது விஸ்வாஸ் மண்டாலிக் அவர்களுக்கும், நிறுவனப்பிரிவில் மும்பையை சேர்ந்த யோகா நிறுவனத்திற்கும் “பிரதமர் விருது” அளிக்கப்படுகிறது.
2. யோகேந்திரஜி என்பவரால் 1918-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த யோகா நிறுவனம் சமூக சேவைகளில் 100-ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது.
3. 2017-ஆம் ஆண்டு புனேவில் உள்ள ருக்மணி ஐயங்கார் யோகா பயிற்சி நிறுவனம் இவ்விருதை பெற்றது.

6. பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் 100-வதுத பொலிவுறு நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில தலைநகரம் எது?

**விடை: ஷில்லாங்**

**விளக்கம்:**

1. மேகாலயாவின் தலைநகரான ஷில்லாங் இந்தியாவின் 100-வது பொலிவுறு நகரமாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
2. பொலிவுறு நகரங்கள் திட்டம் 2015 ஜூன் 25 அன்று தொடங்கப்பட்டது.

7. 52-வது SKOCH உச்சி மாநாட்டில் உட்கட்டமைப்பு பிரிவில் கப்பல் அமைச்சகத்தின் எந்த திட்டத்திற்கு தங்க விருது வழங்கப்பட்டது?

**விடை: சாகர்மாலா**

**விளக்கம்:**

1. துறைமுகங்களை நவீனப்படுத்த தொடங்கப்பட்டதே சாகர்மாலா திட்டமாகும்.
2. மேலும், "Order of Merit" விருதும் சாகர்மாலா திட்டத்திற்கு வழங்கப்பட்டது.

8. நிகழாண்டுக்கான தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்புக்கான விருது (National Maritime Search and Rescue Award)-க்கு தெரிவு செய்யப்பட்டவர் யார்?

**விடை: மிலன் சங்கர் தாரே**

**விளக்கம்:**

1. இவர் மகாராஷ்டிரா மாநிலம் பால்கர் மாவட்டத்தை சேர்ந்த மீனவர் ஆவார்.
2. கடந்த மே மாதம் 9-ம் தேதி 'சிவ்னேரி' என்ற மூழ்கிய மீன்பிடி படகிலிருந்து 12 பேர் உயிரை காப்பாற்றியதற்காக இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது.

9. கடந்த 50 ஆண்டுகளில் மேன் புக்கர் பரிசு வென்ற புத்தகங்களில் தலைசிறந்த ஒன்றாக தேர்வு செய்யப்பட்ட புத்தகம் எது?

**விடை: The English Patient**

**விளக்கம்:**

1. இந்தப் புத்தகம் 199-ல் மேன் புக்கர் பரிசினை வென்றது. இதன் ஆசிரியர் மைக்கேல் ஒன்டாட்ஜேய் (Michael Ondaatje)
2. 1996-ல் இப்புத்தகத்தின் கருத்தை மையமாகக் கொண்டு Ralph Fiennes AND Juliette Binoche என்ற படம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

10. ராமன் மகசேசே விருது பெறும் இந்தியர்கள் யார்?

**விடை: பாரத் வாத்வானி, சோனம் வான்சக்**

**விளக்கம்:**

1. இந்தியாவில் மனரீதியாக பாதிக்கப்பட்டோருக்கு சிறப்பான முறையில் சேவையாற்றியதற்காக பாரத் வாத்வானிக்கு மகசேசே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
2. சோனம் வான்சக்ருக்கு, வட இந்தியாவின் மிகவும் பின் தங்கிய பகுதியில் கல்வி அமைப்புகளில் சீர்திருத்தங்களை செய்ததற்காக விருது வழங்கப்படவுள்ளது.
3. இவர்களைத் தவிர்த்து, கம்போடியா நாட்டின் யுக்சாங், கிழக்கு தைமூரைச் சேர்ந்த மரியா டி லூர்டிஸ் மார்டின் குருஸ், பிலிப்பைன்ஸ் நாட்டின் ஹோவர்ட் டி, வியட்நாமைச் சேர்ந்த வோ தே ஹோயங்க் யென் ரோம் ஆகியோருக்கும் மகசேசே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

11. நிகழாண்டின் “கோல்டன் மேன் புக்கர்” பரிசை வென்ற புதினம் எது?

**விடை: The English Patient**

**விளக்கம்:**

1. ஆங்கில மொழியில் எழுதப்படும் சிறந்த புதினத்துக்கான பரிசான “மேன் புக்கர்” 1969-ம் அண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 50 ஆண்டுகளை நிறைவு செய்த நிலையில், “மேன் புக்கர் பொன்விழா” கொண்டாடப்பட்டது.
2. “The English Patient” நூல் 1992-ம் ஆண்டு “மேன் புக்கர்” பரிசு வென்றது. இரண்டாம் உலகப் போரின்போது நடந்த பிரச்சனைகள் மற்றும் இருவரிடையேயான காதலினை கருவாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டது.

# நியமனங்கள்

1. மத்திய மறைமுக வரி (ம) சுங்க வரி வாரியத் தலைவர் யார்?

**விடை** : எஸ். ரமேஷ்

**விளக்கம்**

1. CBIC (Central Board of Indirect Taxes and Customs)- ன் தலைவரான வனஜா என். சர்மாவின் பதவிக்காலம் முடிந்ததை அடுத்து ரமேஷ் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
2. எஸ். ரமேஷ் 2013 முதல் 2016 வரை CBIC- ன் சென்னை வாரியத்தின் தலைமை ஆணையராகப் பணிபுரிந்தார்.

2. பாகிஸ்தானின் முதல் பார்வை குறைபாடுள்ள நீதிபதியாக பதவியேற்றுள்ளவர் யார்?

**விடை** : யூசப் சலீம்

**விளக்கம்**

1. லாகூரைப் சேர்ந்த இவர் கடந்த மாதம் பாகிஸ்தானின் முதல் பார்வை குறைபாடுள்ள நீதிபதி என்னும் பெருமையை பெற்றுள்ளார்.

3. சர்வதேச குடியேற்ற அமைப்பின் (10 M – International Organization for Migration) புதிய தலைவர் யார்?

**விடை** : ஆண்டனியோ விட்டோரினோ (Antonio Vitorino)

**விளக்கம்**

1. ஐ.நா அவையின் சர்வதேச குடியேற்ற அமைப்பின் (10 M) தலைவராக போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த ஆண்டனியோ விட்டோரினோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு முன் வில்லியம் லேசி ஸ்விங் தலைவராக இருந்தார். வரும் அக்டோபர் மாதம் 1-ம் தேதியுடன் அவரது பதவிக்காலம் முடிவடைகிறது?
2. 10 M ஆனது ஐ.நா வின் புலம்பெயர்தல் முகமையாகும். இது 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் புலம்பெயர்தல் துறையில் உலக அரசுகளுக்கிடையே இயங்கிவரும் முன்னனி அமைப்பாகும். இது உலகளவில் இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவும் ஓர் அமைப்பாகும்.

4. மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வரி வாரியத்தின் **(CBIC -Central Board of Indirect Taxes and Customs) புதிய தலைவர் யார்?**

**விடை** : எஸ். ரமேஷ்

**விளக்கம்**

1. CBIC- ன் முன்னாள் தலைவர் வனஜா என். சர்மா ஜூலை 1-ம் தேதியுடன் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வரி (CBIC) வாரியத்தின் புதிய தலைவராக எஸ். ரமேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. CBIC என்பது மறைமுக வரிகள் மற்றும் சுங்க வரிகளை வசூலிப்பது மற்றும் நிர்வகிப்பதற்கான இந்திய ஒன்றியத்தின் உச்ச அமைப்பாகும்.

5. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பொருளாதாரத் தரவு சேகரிப்புக்கான நெறிமுறைகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு எந்தக் குழுவை அமைத்துள்ளது?

**விடை** : ரவீந்திர H தோலக்கியா குழு

**விளக்கம்**

1. தேசிய கணக்குகள் அல்லது நிகர உள்நாட்டு உற்பத்தியில் (GDP-Gross domestic product) கணக்கீட்டிற்கான அடிப்படை ஆண்டை திருத்தியமைப்பதற்கான திட்டங்களில மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் பொருளாதாரத் தரவை கணக்கிடுவதற்கான விதிமுறைகளை மேம்படுத்துவதற்காக 13 பேர் கொண்ட குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

6. **Payment Council of India**-ன் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : விஸ்வாஸ் படேல்

**விளக்கம்**

1. PCI- ன் முன்னாள் தலைவரான நவீன் சூர்யா ஓய்வு பெற்றதை அடுத்து இந்நியமனம் நிகழ்ந்தது.

7. **CAT- Central Administrative Tribunal**- ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : நரசிம்மா ரெட்டி

**விளக்கம்**

1. இவர் பாட்னா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதபதி ஆவார்.
2. ஜனவரி 2, 2015 முதல் ஜூலை 31, 2015 வரை இவர் தலைமை நீதபதியாக பணியாற்றினார்.

3. இவர் மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட, OROP திட்டத்தை கண்காணிப்பதற்காக தனி மனித நீதி ஆணையர் ஆவார்.
4. **OROP-One Rank One Pension.**

8. NGT- ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : நீதபதி ஆதர்ஷ் குமார் கோயல்

**விளக்கம்**

1. **NGT-National Green Tribunal**
2. ஆதர்ஷ் குமார் கோயல், அண்மையில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதபதி ஆவார்.
3. இவருக்கு முன் NGT- ன் தலைமை பொறுப்பில் இருந்தவர் நீதபதி ஸ்வர்த்தனர் குமார்.

9. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : ஆதர்ஷ் குமார் கோயல்

**விளக்கம்**

1. இவர் உச்சநீதிமன்ற தலைமை நீதபதியாக இருந்து ஜூலை 6 -ல் ஓய்வு பெற்றார்.
2. இதனை தொடர்ந்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் மூன்றாவது தலைவராக ஜூலை 9 –ல் பதவியேற்றுக்கெண்டார். இவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
3. இதற்கு முன் உமேஷ் தத்தாத்ரேய சால்வி, ஜாவத் ரஹீம் ஆகியோர் பொறுப்பு தலைவராக அடுத்தடுத்து நியமிக்கப்பட்டனர்.

10. புதிய கல்விக்கொள்கையை உருவாக்குவதற்காக யார் தலைமையில் மத்திய அரசு தலைமையில்ளது?

**விடை** : கஸ்தூரி ரங்கன்

**விளக்கம்**

1. இஸ்ரோவின் முன்னாள் தலைவரான இவர் தலைமையிலான குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்க ஆகஸ்டு-31 வரை கால அவகாசம் அளித்து மத்திய அரசு பிறப்பித்துள்ளது.
2. புதிய கல்விக்கொள்கை உருவாக்க இதற்கு முன் முன்னாள் மத்திய அமைச்சரவை செயலாளர் டிஎஸ்ஆர்.சுப்பிரமணியன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

11. இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஐ.நா இராணுவ கண்காணிப்புக் குழுவுக்கான **(UNMOGIP)** திட்ட தலைவர் மற்றும் இராணுவ கண்காணிப்புத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : ஜோஸ் எலேடியா அல்கைன்

**விளக்கம்**

1. உருகுவே இராணுவத்தின் படைத்துறைத் பணித்தலைவர் ஜோஸ் எலேடியா அல்கைன், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஐக்கிய நாடுகள் ராணுவ கண்காணிப்புக்குழுவுக்கான ((UNMOGIP) திட்ட தலைவர் மற்றும் இராணுவ கண்காணிப்புத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

12. ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தின் புதிய தலைமை இயக்குநர் மற்றும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : PK ஸ்ரீவஸ்தா

**விளக்கம்**

1. இதற்கு முன் அவர் அந்த வாரியத்தின் கூடுதல் நிர்வாக இயக்குநராக பதவி வகித்துள்ளார்.
2. இது மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி துறையின் கீழ் செயல்படும் ஒரு தொழில்துறை அமைப்பாகும்.
3. இதன் தலைமையகம் மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

13. வாரக்கடன்களை கையாளுவது மற்றும் கடனளிப்பு திறனை உருவாக்குவதற்காக நிதி அமைச்சகத்திடம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ள உயர்மட்டக்குழு எது?

**விடை** : சுனில் மேத்தா குழு

**விளக்கம்**

1. இக்குழு தனது அறிக்கையை மத்திய நிதியமைச்சர் பியுஷ் கோயலிடம் சமர்பித்தது.
2. சுனில் மேத்தா குழு சஷக்த் என்ற திட்டத்தை முன்வைத்துள்ளது. ரூ.50கோடி. 50-500 கோடி மற்றும் ரூ.500 கோடிக்கும் மேலான கடன்களுக்கு 5 உத்திகள் அணுகுமுறையை இந்த அறிக்கை பரிந்துறைத்துள்ளது.

14. பிஜி நாட்டுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : யோகேஷ் பன்ஜா

**விளக்கம்**

1. தலைநகரம் : சுவா
2. அதிபர் : ஜார்ஜ் கோன்ரோட்
3. பிரதமர் : ஃப்ராங்க் பயனிமரமா
4. நாணயம் : டாலர்

15. **CGF - ன் Athletes Advisory Commission** - ன் ஆசிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : தீபிகா பல்லிகல்

**விளக்கம்**

1. இவர் ஒரு ஸ்குவாஸ் வீராங்கனை (**Squash Player**) ஆவார்.
2. **CGF – Commonwealth Games Federation**
3. **CGF AAC-ல்** ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி நியமிக்கப்படுவார்.

16. BBC- ன் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : உதய்குமார் வர்மா

**விளக்கம்**

1. இவர் தகவல் மற்றும் ஒலிபரப்பு துறையின் முன்னாள் செயலாளர் ஆவார்.

17. ICWA- ன் பொது இயக்கனராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : டாக்டர் T.C.A ராகவன்

**விளக்கம்**

1. இதுவரை துணைக் குடியரசுத் தலைவரும், **ICWA- ன் தலைவருமான M. வெங்கய்ய நாயுடு நியமித்தார்.**
2. **ICWA – Indian Council of World Affairs**

18. உலக சுங்க அமைப்பின் (**WCO – World Customs Organisation**), ஆசிய –பசுபிக் பிராந்தியத் தலைவராக நியமிக்கப்பட்ட நாடு எது?

**விடை** : இந்தியா

**விளக்கம்**

1. ஜூலை 2018 முதல் ஜூன் 2020 வரை உள்ள 2 ஆண்டுகளுக்கு இந்தியா இப்பதவியை வகிக்கும். மேலும் இந்தியா WCO Council-ன் துணைத்தலைவராகவும் பொறுப்பு வகிக்கும்.
2. WCO தனது உறுப்பினர்களை மொத்தம் 6 பிராந்தியங்களாகப் பிரிக்கிறது. அதில் ஒவ்வொரு பிராந்தியத்திற்கு ஒரு பிராந்திய தலைவரை நியமிக்கிறது.
3. மேலும், உலகிலுள்ள 182 சுங்க நிர்வாகங்களை WCO கட்டுபடுத்தி உலக வர்த்தகத்தில் சுமார் 98 சதவீதத்தை ஒருங்கிணைபக்கிறது.

19. இந்திய கடலோரக்காவல் படை கிழக்கு பிராந்தியத்தின் பதிய தளபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : பரமேஷ் சிவமணி

**விளக்கம்**

1. இதற்கு முன் இப்பொறுப்பை வகித்து வந்த ராஜன் பர்ஹோத்ரா கொல்கத்தாவை தலைமையிடமாகா கொண்ட வடகிழக்கு பிராந்தியத்தின் தளபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
2. பரமெஷ் சிவமணி இதற்கு முன்பு புதுடெல்லியில் உள்ள கடலோரக்காவல் படை தலைமை அலுவலகத்தில் துணை இயக்குனராக இருந்து வந்தார்.

3. இவரது சேவையை பாராட்டி மதிப்புமிகுந்த தட்ராஷக் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

20. ராஜ்ய சபாவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் எத்தனைப்பேரை நியமித்தார்?

**விடை** : 4

**விளக்கம்**

1. இந்திய அரசியலமைப்பின் 80-வது சரத்துப்படி, இந்தியக் குடியரசுத் தலைவர், ராஜ்ய சபாவிற்கு 4 உறுப்பினர்களை பிரதமரின் ஆலோசனைப்படி நியமிக்க அதிகாரம் பெற்றுள்ளார்.
2. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட நால்வர்:
   1) ஸ்ரீ ராம் ஷக்கல் 2) ஸ்ரீ ராகேஷ் சின்ஹா
   3) ஸ்ரீ ரகுநாத் மொஹபத்ரா 4) திருமதி சோனல் மான்சிங்

21. அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் 2017-ஆம் ஆண்டிற்கான சிறந்த கால்பந்து வீரர் மற்றும் வீராங்கனை விருதுகளை பெற்றவர்கள் யார்?

**விடை** : சுனில் சேத்ரி, கமலா தேவி

**விளக்கம்**

1. மேலும், பிரபல வீரர் பாய்ச்சுங் பூட்டியாவுக்கு பின்னர் இந்திய அணிக்காக 100 சர்வதேச ஆட்டங்களில் விளையாடியவர் என்ற சிறப்பை சுனில் சேத்ரி பெற்றுள்ளார்.

22. தெலுங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களுக்கான ஹைதராபாத் உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளார் யார்?

**விடை** : தோட்டத்தில் B ராதாகிருஷ்ணன்

23. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ( **NGT-National Green Tribunal)** புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : ஆதர்ஷ் குமார் கோயல்

**விளக்கம்**

1. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் இடைகால தலைவராக நீதிபதி ஜாவத் ரஹிம் வகித்து வந்தார். இதையடுத்து உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்து

ஜூலை 7 அன்று ஓய்வுபெற்ற நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் தேசிய பசுமை தீர்ப்பாய தலைவராக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலமானது அவர் பதவியேற்றுக் கொண்ட நாளிலிருந்து அடுத்த 5 ஆண்டுகள் அல்லது அவர் 70 வயது அடையும் வரை இருக்கும்.

24. ஒலிபரப்பு உள்ளடக்க புகார்கள் சபையின் (BCCC) புதிய உறுப்பினர் யார்?

**விடை** : உதய் K வர்மா

**விளக்கம்**

1. BCCC என்பது இந்தியாவிலுள்ள செய்திகள் தவிர்த்து அனைத்து பொழுதுபோக்கு தொலைக்காட்சிகளின் உள்ளடக்கங்கள் குறித்து புகாரளிப்பதற்காக 2011 ஜூன் மாதம் இந்திய ஒலிபரப்பு அறக்கட்டளையால் (IBF) நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. **Crew Escape System** என்ற தொழில்நுட்ப அடிப்படையிலான ஏவுகனையின் முதல் சோடனையை வெற்றிகரமாக நிகழ்த்திய அமைப்பு எது?

**விடை** : **ISRO (Indian Space Research Organization)**

**விளக்கம்**

1. **Crew Escape System** என்பது விண்வெளியில் செலுத்தப்படும் ஏவுகணையின் செயல்பாட்டில் ஏதேனும் ஆபத்து ஏற்படும் போது, விண்வெளி வீரர்கள் உள்ள ஏவுகனைத் தொகுதியைஇ ஏவுகணையை விட்டு பாதுகாப்பான இடத்திற்கு வேகமாக இழுக்கும் போது தொழில்நுட்பம் ஆகும்.
2. இத்தகைய தொழில்நுட்பத்தை, மனித விண்வெளிப் பயணத்தில் செயல்படுத்துவது மிகக் கடினமான ஒன்று.

3. இச்சொதனையானது சத்தீஸ் தவான் விண்வெளி மையத்திலிருந்து (ஸ்ரீஹரிக்கேட்டா) நிகழ்த்தப்பட்டது.

2. எந்த அமைப்பு முதல் BS-IV எஞ்சின் சான்றிதழை வெளியிட்டுள்ளது?

**விடை : ICAT (International Centre for Automotive Technology),**
ஹரியானா

**விளக்கம்**

1. BS-IV எஞ்சின் என்பது குறைந்தஅளவு சல்பர் மாசுவை வெளியிடும் எரிபொருளாள் இயங்கும் இயந்திரம் ஆகும்.
2. இவ்வகை எஞ்சினை இந்தியாவின் Volvo Eicher நிறுவனம் வடிவமைத்துள்ளது.
3. வரும் 2020, ஏப்ரல் 1-க்கு முன் இவ்வகை எஞ்சின்களின் இணைக்க சோதனை நிறவடைந்து பயன்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.
4. இந்தியாவில் தற்போது BS-IV ரக எரிபொருளை நாம் பயன்படுத்தி வருகிறோம்.

3. நுகர்வோர் நலனை பாதுகாக்க, **''GST Verify''** என்ற செயலியை உருவாக்கியுள்ள அமைப்பு எது?

**விடை : CBIC**

**விளக்கம்**

1. **CBIC-Central Board of Indirect Taxes and Customers**
2. நுகர்வோரிடமிருந்து GST –யை சேகரிக்கும் நபர், அதனை பெற தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தவே இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
3. மேலும், இச்செயலி மூலம் நுகர்வோரிடமிருந்து GST –யை பெறும் நபர் எந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்றும் அறிய முடியும்.

**4.** இந்தியாவில் **முதல் இணைய தொலைபேசி (Internet Telephony)** சேவையை துவங்கிய நிறுவனம் எது?

**விடை : BSNL (Bharat Sanchar Nigam Limited)**

**விளக்கம்**

1. ''Wings'' என்ற செயலி மூலம் இந்தியா முழுவதும், எந்த எண்ணிற்கு வேண்டுமானாலும் அழைப்பை மேற்கொள்ள முடியும்.

**5.** இந்த நூற்றாண்டின் மிக நீண்ட கால அளவு கொண்ட அபூர்வ சந்திரகிரகணம் எப்போது தோன்றுகிறது?

**விடை : ஜுலை 27**

**விளக்கம்**

1. நிமிடங்கள் நிகழவுள்ள இந்த சந்திர கிரகணத்தை Blood Moon என்று அழைக்கிறார்கள்.

6. இந்தியா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் இடையேயான 6-வது SIC (Science and Innovation Council) கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை :** புதுடெல்லி

**விளக்கம்**

1. இந்தக் கூட்டத்தில், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பொருளாதாரம், பாதுகாப்பான தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு போன்றவற்றிற்கான மையங்கள் அதிகரிப்பதன் அவசியத்தை டாக்டர் ஹர்ஷ் வர்தன் விளக்கினார்.

# விளையாட்டு நிகழ்வுகள்

1. **Kabaddi Masters Title-யை** வென்ற நாடு எது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. **six – nation Kabaddi** ஆயளவநசள போட்டியானது துபாயில் நடைபெற்று வந்தது.
2. இப்போட்டியை சர்வதேச கபடி கூட்டமைப்பு, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் (ம) துபாய் விளையாட்டுக் கவுன்சில் ஆகியவை இணைந்து நடத்தின.

2. தொடர்ந்து 2-வது முறையாக ஹாக்கி கோப்பையை வென்ற நாடு எது?

**விடை: ஆஸ்திரேலியா**

**விளக்கம்:**

இதில் ஆஸ்திரேலியா 3-1 என்ற கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது.

3. **$12^{th}$ Malaysia Open Title**-யை வென்ற நாடு எது?

**விடை: மலேசியா**

**விளக்கம்:**

1. மலேசிபாவின் லீ சாங் வெய் **(Lee Chong Wei)**, ஜப்பானின் கென்டோ மொமொடாவை வீழ்த்தி பட்டத்தை வென்றார்.

4. டி-20 போட்டியில் அதிக ரன்களை குவித்து உலக சாதனை புரிந்தவர் யார்?

**விடை: ஆரோன் பின்ச்**

**விளக்கம்:**

1. ஜிம்பாப்வேக்கு எதிராக டி20 போட்டியில் ஆஸ்திரேலிய வீரர் ஆரோன் பின்ச் 76 பந்துகளில் 16 பவுண்டரிகள், 10 சிக்ஸர்களுடன் 172 ரன்களை குவித்து புதிய சாதனை படைத்தார்.
2. இதற்கு முன்பு 156 ரன்களை அவரே குவித்து சாதனை புரிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

5. நிகழாண்டில் லண்டனில் நடைபெற உள்ள மகளிர் ஹாக்கி உலகக் கோப்பை போட்டியில் இந்திய பெண்கள் அணிக்கு தலைமை தாங்குபவர் யார்?

**விடை: ராணி ராம்பால்**

**விளக்கம்:**

1. ஜூலை 21ல் லண்டனில் தொடங்கும் இப்போட்டியில் சுனிதா லக்ரா, தீபிகா உள்ளிட்ட 18 பேர் கொண்ட ஹாக்கி இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

6. யாருடைய தலைமையின் கீழ் இந்திய கபடி அணி நிகழாண்டின் "கபடி மாஸ்டர்ஸ் துபாய்" பட்டத்தை வென்றது?

**விடை: அஜய் தாக்கூர்**

**விளக்கம்:**

1. துபாயில் நடந்த நிகழாண்டின் கபடி மாஸ்டர்ஸ் இறுதிப் போட்டியில் அஜய் தாக்கூர் தலைமையிலான இந்திய அணியும் ஈரான் அணியும் மோதின. இறுதியில் 44-26 என்ற புள்ளி கணக்கில் ஈரானை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

2. சர்வதேச நாடுகளுக்கிடையே நடைபெற்ற இந்த போட்டியை பன்னாட்டு கபடி கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. உலக சாம்பியனாக திகழும் இந்திய தற்போது கபடி மாஸ்டர்ஸ் பட்டத்தையும் வென்றுள்ளது.

7. காமன்வெல்த் தடகள வீரர்கள் ஆலோசனைக்குழுவில் ஆசிய கண்டத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: தீபிகா பல்லிக்கல்**

**விளக்கம்:**

1. 71 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பில் ஒவ்வொரு கண்டத்தின் சார்பிலும் ஒரு பிரதிநிதி ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்படுவர்.
2. இந்திய ஸ்குவாஷ் நட்சத்திரமான தீபிகா பல்லக்கல் ஆசிய கண்டத்தின் சார்பில் பிரதிநிதியாக தேர்வு செய்யப்படுதற்கு இவர் பெயரை இந்திய ஒலிம்பிக் சங்கம் பரிந்துரைத்தது.

8. நிகழாண்டின் ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஷிப் கோப்பையை வென்ற நாடு எது?

**விடை: ஆஸ்திரேலியா**

**விளக்கம்:**

1. நெதர்லாந்து நாட்டில் உள்ள பிரிடா நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்திய அணியை தோற்கடித்து ஆஸ்திரேலியா அணி பட்டம் வென்றுள்ளது.

9. 2018 ஆடவர் ஒற்றையர் மலேசிய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் வென்றவர் யார்?

**விடை:** லீ சோங் வேய்

**விளக்கம்**

1. மலேசிய ஓப்பன் பாட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில், மலேசியாவின் லீ சோங் வேய், 12-வது முறையாக பட்டம் வென்றுள்ளார்.
2. கோலாம்பூரில் ஜூலை 1 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், ஜப்பானின் கெண்டோ மொமொடாவை அவர் 21-17, 23-21 என்ற நேர் செட்களில் வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் தைவானின் தாய் சூ யிங் சீனாவின் ஹீ பிஞ்சியா-வை 22-20, 21-11 என்ற செட்கணக்கில் வென்றார்.

10. ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை போட்டியில் தங்கம் வென்றவர் யார்?

**விடை:** தீபா கர்மாக்கர்

**விளக்கம்**

1. துருக்கி நாட்டின் மெர்சினில் இந்த **FIG Artistic Gymnastics World Challenge Cup போட்டிகள் நடைபெற்றன.**
2. இது தீபா கர்மாக்கரின் முதல் உலகச் சாதனை ஆகும்.

11. செரீனா – வில்லியம்ஸ் -யை தோற்கடித்து விம்பிள்டன் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை:** ஏஞ்சலிக் கெர்பர்

**விளக்கம்**

1. விம்பிள்டன் டென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் கெர்பர் முதன் முதலாக சாம்பியன் பட்டம் வென்றார்.
2. இவர் 6-3, 6-3 என்ற கணக்கில் முன்னாள் சாம்பியன் செரீனா வில்லியம்ஸை தோற்கடித்தார்.

12. வரும் 2022-ல் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் எங்கு நடைபெற உள்ளது?

**விடை:** கத்தார்

**விளக்கம்**

1. வரும் 2022-ல் நவம்பர் 22 முதல் டிசம்பர் 18 வரை இப்போட்டிகள் நடைபெறப்போவதாக FIFA தலைவர் ஜியானி இன் பேன்டினோ தெரிவித்துள்ளார்.
2. மேலும் தற்போதுள்ள 32 அணிகளை 48 அணிகளாக அதிகரிப்பது குறித்து கத்தார் கால்பந்து நிர்வாகத்துடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

13. உலகக் கோப்பை கால்பந்து -2018 போட்டியில் பட்டம் வெள்ற நாடு எது?

**விடை:** பிரான்ஸ்

**விளக்கம்**

1. இறுதி ஆட்டத்தில் 4-2 என்ற கோல் கணக்கில் குரோஷிய அணியை தோற்கடித்து, பிரான்ஸ் 2-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.
2. இதில் சாம்பியனான பிரான்ஸ் அணிக்கு ரூ.261 கோடி பரிசுத்தொகையும், 2-ம் இடம்பெற்ற குரோஷிய அணிக்கு ரூ.191 கோடி பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது.
3. தலைநகரம் : பாரிஸ்
4. நாணயம் : யூரோ
5. பிரதமர் : எட்வர்டு பிலிப்
6. அதிபர் : இம்மானுவேல் மேக்ரோன்

14. பி∴பா உலகக் கோப்பை போட்டியில், சிறந்த வீரருக்கான தங்க கால்பந்து விருதைப் பெற்ற குரோஷிய வீரர் யார்?

**விடை:** லுகா மொட்ரிக்

**விளக்கம்**

1. இதே போல், மற்ற விருதுகளை பெறுபவர்கள்:
2. சிறந்த இளம் வீரருக்கான விருது – மாப்பே (பிரான்ஸ்)
3. அதிக கோலடித்த வீரருக்கான விருது - ஹரிகேன் (இங்கிலாந்து)
4. சிறந்த கோல் கீப்பருக்கான தங்க கையுறை விருது – கோர்டியாஸ்(பெல்ஜியம்)
5. ∴பேர் பிளே விருது - ஸ்பெயின்

15. விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** ஜோகோவிச்

**விளக்கம்**

1. இறுதி ஆட்டத்தில் கெவின் ஆண்டர்சனை வென்று 4 வது முறையாக இவர் விளிம்பிள்டன் பட்டத்தை வென்றார்.
2. இதே போல், ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரையன் சகோதரர்களில் ஒருவரான மைக் பிரையன் -ஜெக் ஸ்டாக் இணை, ராவன் கிளாஸன் மைக்கேல் வீனஸ் இணையை வீழ்த்தி சாம்பியன் பட்டம வென்றது.

16. ஆசிய விளையாட்டு போட்டிகள் எந்த ஆண்டு முதல் நடைபெற்று வருகிநது?

**விடை:** 1951

**விளக்கம்**

1. இந்த ஆண்டு இப்போட்டி இந்தோனேசியாவின் தலைநகரமான ஜகர்த்தாவிலும், பாலேம்பங்கிலும் ஆகஸ்டு 18-ல் தொடங்கி செப்டம்பர் 2-வரை நடைபெற உள்ளது.
2. இப்போட்டிக்கான ஜோதி ஓட்டம் புதுடெல்லியில் குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
3. இந்திய ஒலிம்பிக்சங்க தலைவர் - நரிந்தர் பத்ரா

17. 2026-ஆம் ஆண்டில் உலகக் கோப்பை கால்பந்து போட்டி எங்கு நடைபெற உள்ளது?

**விடை:** கனடா, அமெரிக்கா, மெக்ஸிகோ

**விளக்கம்**

1. இது 23-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டியாகும். இதனை FIFA தலைவர் ஜியோனி இன் பேன்னோ தெரிவித்துள்ளார்.
2. இந்த போட்டியில் தான் தற்போதுள்ள 32 அணிகளை 48 அணிகளாக அதிகரித்து போட்டி நடத்த முடிவு செய்துள்ளது.

18. முதல் தடகள உலகக் கோப்பையை வென்ற நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்**

1. லண்டனில் நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்கா 57 புள்ளிகள் வித்தியாசத்தில் போலந்து நாட்டை தோற்கடித்து சாம்பியன் பட்டம வென்றது.
2. இப்போட்டியில் 3-வது இடம் பிடித்த நாடு பிரிட்டன் ஆகும்.
3. அமெரிக்காவின்

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | வாஷிங்டன் |
| அதிபர் | : | டொனால்டு டிரம்ப் |
| நாணயம் | : | டாலர். |

19. உலக ஜூனியர் தடகளப் போட்டியில் முதன்முதலாக தங்கம் வென்ற இந்திய பெண்மணி யார்?

**விடை: ஹிமா தாஸ் (Hima Das)**

**விளக்கம்**

1. இவர் 400 மீட்டர் தடகள ஓட்டத்தை 51.46 நொடியில் நிறைவு செய்து தங்கம் வென்றார்

20. அண்மையில் ஓய்வு பெறுவதாக அறிவித்த இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை:** முகமது கை.்.ப்

**விளக்கம்**

1. 37 வயதாகும் இவர், இதுவரை 13 டெஸ்ட் மற்றும் 125 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.
2. 2003-ல் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா உலகக் கோப்பையை வென்றதற்கு இவரும் ஒரு முக்கிய காரணமாவார்.

21. ஜூலை 2018-ல் வெளியிடப்பட்ட சர்வதேச டென்னிஸ் தரவரிசை பட்டியலின்படி முதலிடம் பிடித்துள்ள வீரர் யார்?

**விடை:** ரபேல் நடால்

**விளக்கம்**

1. விம்பிள்டன் போட்டிக்கு பிறகு வெளியிடப்பட்ட இத்தரவரிசை பட்டியலில் ரோஜர் பெடரர், அலெக்சாண்டர் வெரேவ் டெல் பொட்ரோ, கெவின் ஆண்டர்சன் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளனர்.

22. இந்தியாவின் சச்சின் டென்டுல்கர் யாருடன் இணைந்து 9 முதல் 14 வயதுடையவர்களுக்கான கிரிக்கெட் அகாடெமியை தொடங்க உள்ளனர்?

**விடை:** இங்கிலாந்தின் மிடில்செக்ஸ் கிரிக்கெட் உள்நாட்டு அணி

**விளக்கம்**

1. தலைநகரம் : லண்டன்
2. பிரதமர் : தெரோசா மே
3. அதிபர் : பவுண்டு

23. 2019- ல் தடகள சாம்பியன் போட்டி எந்த நாட்டில் நடைபெற உள்ளது?

**விடை:** கத்தார்

**விளக்கம்**

1. 2022-ல் உலகக் கோப்பை கால்பந்து போட்டி கத்தார் நாட்டில் நடைபெற உள்ளது இப்போட்டியில் தற்போது பங்கேற்றுவரும் 32 அணிகளின்

எண்ணிக்கையை 48 ஆக அதிகரிக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இது 22-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டியாகும்.

2. வரும் 2022-ல் நவம்பர் 21 முதல் டிசம்பர் 18 வரை இப்போட்டிகள் நடைபெறபோவததாக FIFA தலைவர் ஜியோனி இன் பேன்டினோ தெரிவித்துள்ளார்.
3. தலைநகரம் : தோகா
4. நாணயம் : ரியால

24. தாய்லாந்து ஓபன் பேட்மின்டன் 2018-யை வென்று சாம்பியனானவர் யார்?

**விடை: நொசோமி ஒகுகாரா (Nozomi Okuhara)**

**விளக்கம்**

1. தனது இறுதி ஆட்டத்தில், ஒலிம்பிக் -ல் வெள்ளிப் பதக்கம் வென்ற P.V. சிந்துவை 21-15, 21-18 என்ற கணக்கில் 50 நிமிடங்களில் வீழ்த்தினார்.
2. ஒகோரா ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

25. அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் 2017-ஆம் ஆண்டிற்கான சிறந்த நடுவராக தேர்வுசெய்யப்பட்டுள்ளவுர் யார்?

**விடை:** சிர் கிருஷ்ணா

26. டெல்லியில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் எத்தனை வீரர்கள் பதக்கங்களை பெற்றனர்?

**விடை:** 4

**விளக்கம்**

1. இதில் 74 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சச்சின் ரதி தனது சுற்றில மல்கோலியாவின் பேட் எர்டென் யாம்பசுரேனை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார்.

27. வரும் 2020-ஆம் ஆண்டு ஒலிம்பிக போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற உள்ளது?

**விடை:** ஜப்பான்

**விளக்கம்**

1. இந்தப் போட்டிக்கான அடையாள சின்னங்களாக ''மிராய்டோவா'', ''சோமெய்டி'' ஆகிய பொம்மைகள் ஜூலை 22 அன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அறிமுகம் செய்யப்பட்டன.
2. பிரதமர் : ஷின்கோ அபே
3. நாணயம் : யென்

28. இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றவர் யார்?

**விடை:** லக்ஷயா சென் **(**இந்தியா)

**விளக்கம்**

1. இப்போட்டியில் தங்கம் வெல்லும் 3-வது இந்தியர் லக்ஷயா சென் ஆவார்.

29. லாகோஸ் சர்வதேச பாட்மிண்டன் போட்டியில் பட்டம் வென்ற நாடு எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்**

1. இந்தியாவின் மானு அத்ரி-சுமீத் ரெட்டி இணை ஆடவர் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றது.
2. இப்போட்டிகள் நைஜீரியாவில் நடைபெற்றன.

30. மகளிர் டென்னிஸ் ஒற்றையர் டபிள்யுடிஏ தரவரிசைப் பட்டியலில் உலகின் முதல் நிலை வீராங்கனை என்ற அநதஸ்தை பெற்றவர் யார்?

**விடை:** சிமோனா ஹலேப் (7571), ருமேனியா

**விளக்கம்**

1. இதில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி (6740) இரண்டாம் இடத்திலும், அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸ் (5463) மூன்றாம் இடத்தையும் வகிக்கின்றனர்.

31. இந்திய மகளிர் வில்வித்தை அணி (காம்பவுண்ட்) உலக தரவரிசைப் பட்டியலில் எத்தனையாவது இடம் பெற்றுள்ளது?

**விடை:** முதல் இடம்

**விளக்கம்**

1. அண்மையில் அண்டாலியா, பெர்லினில் நடைபெற்ற உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்திய காம்பவுண்ட் பிரிவு மகளிர் அணி இரண்டு வெள்ளி பதக்கங்களை வென்றது குறிப்பித்தக்கது.

32. டைமண்ட் லீக் தடகள போட்டி இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற இந்திய வீரா் யாா்?

**விடை:** நீரஜ் சோப்ரா

**விளக்கம்**

1. டைமண்ட் லீக் போட்டிகள் உலகின் தலைச்சிறந்த தடகள வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் பிரசித்திப்பெற்றது. முதல் 8 இடங்களைப் பெறுவோருக்கு ரொக்கப்பரிசு தரப்படுகிறது.

33. 19 வயதுக்குட்பட்டோா் யூத் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்ற அணி எது?

**விடை:** இந்திய அணி

**விளக்கம்**

1. அம்பன்தோடா மகிந்த ராஜபட்ச மைதானத்தில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இந்தப் போட்டியை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றது.
2. இதில் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டென்டுல்கரின் மகன் அா்ஜுன் டென்டுல்கா் முதன்முதலாக சா்வதேச போட்டியில் அறிமுகமான நிலையில் ஒரு விக்கெட்டை வீழ்த்தினாா்.

34. ரஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டி ஆடவா் ஒற்றையா் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியா் யாா்?

**விடை:** சௌரவ் வா்மா

**விளக்கம்**

1. விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெற்ற இந்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜப்பானின் கோகி வாட்டன்பேவை தோல்வியுறச்செய்து இப்பட்டத்தை வென்றாா்.
2. இதேபோல் கலப்பு இரட்டையா் பிரிவில் இந்தியாவின் ரோஹன் கபூர்-குஹுகார்க் இணை ரஷ்யாவின் விளாடிமிா் இவனோவ்-கொரியாவின் மின்கியூங் இணையிடம் தோற்று இரண்டாம் இடத்தை பிடித்தது.

35. யாசா் டோகு சா்வதேச மல்யுத்த போட்டியில் இந்தியா எத்தனை தங்க பதக்கங்கள் வென்றது?

**விடை:** 2

**விளக்கம்**

1. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் பஜ்ரங் புனியா 70 கிலோ எடைப்பிரிவிலும், மகளிர் பிரிவில் 55 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் பிங்கியும் தங்கப்பதக்கங்களை வென்நனர்.
2. இதேபோல் இந்தியாவின் சீமா, பூஜா தண்டா ஆகியோர் முறையே 53 கிலோ, 57 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.
3. மேலும் இந்தியாவின் சங்கீதா போகட் 59 கிலோ எடைபிரிவிலும் கீதா 65 கிலோ எடைப்பிரிவிலும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

36. சென்னையில் நடைபெற்ற உலக ஜீனியர் ஆடவர் ஸ்குவாஷ் போட்டியில் சாம்பியன் பட்டம வென்ற நாடு எது?

**விடை: எகிப்து**

**விளக்கம்:**

1. இறுதி ஆட்டத்தில் 2-0 என்ற கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி எகிப்து இப்பட்டத்தை வென்றது.

37. ஐசிசி டெஸ்ட் பேட்ஸ்மேன் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகித்து வருபவர் யார்?

**விடை: ஸ்டீவ் ஸ்மித் (ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன்)**

**விளக்கம்:**

1. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில் பந்தை சேதப்படுத்திய புகார் தொடர்பாக அவருக்கு ஆஸ்திரேலியா 12 மாதங்கள் கிரிக்கெட் ஆட தடை விதித்துள்ளது.

# வர்த்தக நிகழ்வுகள்

1. பண்டமாற்று பங்குசந்தைகளை உருவாக்குவதற்காக பாம்பே உலக சந்தையுடன் இணைந்துள்ள இந்திய பங்குச் சந்தை நிறுவனம் எது?

**விடை: மும்பை பங்குச்சந்தை**

**விளக்கம்:**

1. இரும்பு அல்லாத உலோக சேர்மங்களின் பண்டமாற்று பங்குசந்தைகளை உருவாக்குவதற்காக பாம்பே உலக சந்தையுடன் முன்னணி இந்திய பங்குச்சந்தை நிறுவனமான மும்பை பங்குசந்தை நிறுவனம் இணைந்துள்ளது.

2. எந்த தொழில்நுட்பத்தின் மூலம் உரமானிய வழங்கலை செயல்படுத்த நிதி ஆயோக் ஆனது புகேஊ உடன் இணைந்துள்ளது?

**விடை: Block Chain**

**விளக்கம்:**

1. இத்தொழில்நுட்பத்தின் மூலம் உரமானிய வழங்கலை செயல்படுத்த நிதி ஆயோக் ஆனது குஜராத் நர்மதா பள்ளத்தாக்கு உரங்கள் மற்றும் இரசாயனங்கள் (GNFC) நிறுவனத்துடன் இணைந்துள்ளது.

3. சுடீஜ எந்த வங்கியின் உரிமத்தை ரத்து செய்துள்ளது?

**விடை: Alwar urban Co-operative Bank**

**விளக்கம்:**

1. இந்தக் கூட்டுறவு வங்கி ராஜஸ்தானில் உள்ளது. அதன் வைப்புத் தொகையாளர்களுக்கு முழுமையாக பணம் கொடுக்க இயலாத அளவில் நஷ்டம் ஏற்பட்டதால் RBI அதன் உரிமத்தை ரத்து செய்துள்ளது.

4. சாஹாபாத் - போஜ்பூரை இணைக்கும் "சன் கால்வாய்" (Son Canal) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள வங்கி எது?

**விடை: ADB (Asian Development Bank)**

**விளக்கம்:**

1. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 503 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.
2. இதில் 352 மில்லியன் அமெரிக்க டாலரை ADB வழங்க உள்ளது.

5. எவ்வளவு மதிப்புடைய புதிய ரூபாய் நோட்டுகளை வெளியிட உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது?

**விடை: ரூ.100**

**விளக்கம்:**

1. கத்திரிபூ (லவண்டர்) வண்ணத்தில் வெளியிடப்பட உள்ள இந்த ரூபாய் நோட்டின் பின்புறம் குஜராத் சரஸ்வதி நதிக்கரையில் அமைந்துள்ள பாரம்பரிய சின்னமான ராணி படிக்கல் கிணற்றின் படம் இடம் பெற்றிருக்கும்.

6. பெருநிறுவனங்கள் விவகார அமைச்சர்கள் குழு (MCA) எந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களை மதிப்பாய்வு செய்து வருகிறது?

**விடை: Companies Act, 2013**

**விளக்கம்:**

1. 10 பேர் கொண்ட இந்த MCA (Ministry of Corporate Affairs) குழுவின் தலைவர் MCA-ன் செயலாளர் ஆவார்.

7. காசோலை மோசடி சட்டத்தில் எந்ததெந்த இரு பிரிவுகள் சேர்க்கப்பட உள்ளன?

**விடை: பிரிவு 143 ஏ, 148**

**விளக்கம்:**

1. கடந்த ஜூலை 23-ம் தேதி மக்களவையில் நிறைவேறிய இந்த மசோதா ஜூலை 26 அன்று மாநிலங்களவையிலுலம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

# நூல்கள்

1. “Two Classical Plays from India” என்ற புத்தகத்தை வெளியிட்டவர் யார்?

**விடை: துணைக்குடியரசுத் தலைவர், ஸ்ரீ M. வெங்கய்ய நாயுடு**

**விளக்கம்:**

1. இந்நூலை ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிப்பெயர்த்தவர் ஸ்ரீ D.P. சின்ஹா

2. “Winning like Sourav : Think & Succeed like Ganguly” என்ற நூலை எழுதியவர் யார்?

**விடை: அபிரூப் பட்டாச்சார்யா**

**விளக்கம்:**

1. 2000 ஆண்டில் சச்சினிடமிருந்த அணித்தலைவர் பொறுப்பு கங்குலிக்கு கிடைத்தது. கங்குலி போன்ற ஒரு சிறந்த அணித்தலைவரின் நிர்வாக அனுபவங்கள், உத்வேகம் அளிக்கும் அவரின் முயற்சிகள் மற்றும் அவரின் வாழ்வியல் நிகழ்வுகளை உள்ளடக்கிய இந்நூல், அவரின் சுயசரிதை அல்ல என்று நூலாசிரியர் அபிரூப் பட்டாச்சார்யா கூறியுள்ளார்.